
புலவர்மணி கா. நீலகண்டன் இயற்றிய

# கந்தவன மணிமாலை



பதிப்பாசிரியர்

செல்லத்துரை சுதர்சன்

புலவர்மணி கா. நீலகண்டன் இயற்றிய

# கந்தவன மணிமாலை


பதிப்பாசிரியர்


**செல்லத்துரை சுதர்சன்**

விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



**கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி**
**தேவஸ்தானம்**
**பொலிகண்டி**
**2015**

| | |
|---|---|
| Title: | **Pulavarmani K.Neelakandanin Kanthavana Manimalai** |
| Editor : | **Sellathurai Sutharsan ©** |
| First Edition: | **03.02.2015** |
| Published by: | **Sri Kanthavanam Kalyana Velava Swamy Thevasthanam, Polikandy.** |
| Cover Design: | **R.Kuganraj & S.Sutharsan** |
| Printer: | **Guru Printers**<br>**39/2, Adiyapatham Road,**<br>**Thirunelvely, Jaffna.** |
| No of Pages: | 87 |
| No of Copies: | **300** |
| Paper Used: | **80gms White Printing** |
| Price : | **350/=** |



பொலிகண்டிக் கந்தவனம் திருவருள்மிகு
ஸ்ரீ கல்யாண வேலவ சுவாமி
(பழையவர்)

**அறுசீர் விருத்தம்**

**கந்த வனத்தான் வேலுண்டு**
**கதிகொள் நீல மயிலுண்டு**
**கந்த மலர்த்தா ளிணையுண்டு**
**கருது வேறு படையுண்டு**
**நந்த லில்சீர் நாவுண்டு**
**நவிலின் சுவைத்தேன் பாவுண்டு**
**எந்த வகையா மிடர்த்தொகையு**
**மெம்மை யென்ன செயுமினியே.**

(கந்தவன மணிமாலை : 14-
புலவர்மணி கா. நீலகண்டன்)

## ஆசிச்செய்தி

**சிவப்பிரம்ம ஸ்ரீ குமரகுருமணி**
**ச.வைத்தியநாதக் குருக்கள்**
பிரதமகுரு- பொலிகண்டி
கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி
தேவஸ்தானம்.

இலங்கையின் முதுபெரும் புலவராகிய சிவசம்புப் புலவர் கந்தவனப்பதி முருகப் பெருமான் மீது அளவுகடந்த பக்தி உடையவராக வாழ்ந்தவர். கந்தன் அருளால் பல பிரபந்தங்களை இயற்றியவர். பக்திச்சுவை பெருகும் புலவரின் பிரபந்தங்கள் ஓதுவதற்குரியவை. புலவர், தாம் இழந்த தமது கண்ணொளியை மீளவும் தருமாறு கந்தவன முருகப்பெருமானை வேண்டிப் பாடிக் கண்ணொளி பெற்றவர். சுந்தரமூர்த்தி நாய னாருக்குப் பின்னர் கண்ணொளி வேண்டிப்பாடிக் கண்ணொளி பெற்றவர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரே. அத்தகைய அருள் திறம் பெற்ற புலவர் வழியில் வந்தவரே, புலவரின் பூட்டன், தமிழ் அறிஞர், புலவர்மணி கா.நீலகண்டன் ஐயா அவர்கள். அவர் எம்முருகன் மீது பாடியதே கந்தவன மணிமாலை எனும் இந்நூலாகும்.

ஆலயத்தில் சிறுவர் முதல் பெரியவர்வரை பாடும் வகையில் மிக எளிய தமிழில், இனிமையான முறையில், பக்திரசம் ததும்பப் புலவர்மணி ஐயா அவர்கள் இப்பாடல்களை ஆக்கித் தந்துள்ளார்கள். பாடல்கள் முழுவதும் எமது சைவசமயக் கருத்துக் களும் சைவசித்தாந்தக் கருத்துக்களும் எளிமையா கவும் சிறப்பாகவும் அமையப் பெற்றுள்ளன. முருக னது திருவிளையாடல்கள், அற்புதங்கள் முதலிய பல்வேறு சிறப்புகளும் பாடல்களில் இடம்பெற்று ள்ளன.

இப்பாடல்களில்வரும் அருள் வேண்டும் பகுதிகள் நெஞ்சை உருக்குவனவாய் அமைந்துள்ளன. கந்தவனத் தலத்தின் பெருமை, தலத்தின் சிறப்பு, தலத்தோடு தொடர்புடைய வரலாற்றுச் செய்திகள் முதலிய பலவும் பாடல்களில் பதிவு பெற்றுள்ளன.

இப்பாடல்கள் பக்தர்களால் மனனம் செய்து பாடப்பட வேண்டியன. இப்பாடல்களைப் பாடுபவர் கந்தனின் அருளைப் பெறுவர் என்பது உறுதியாகும்.

பக்திச்சுவை பொதிந்த இந்நூலை வெளியிட முன்வந்த கந்தவன ஆதீன கர்த்தா திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அம்மையருக்கும் இந்நூலின் பதிப்பாசிரியராகப் பெறுப்பேற்று அதனைத் திறம்பட நிறைவேற்றிய புலவர்மணியின் மாணவர் செல்லத்துரை சுதர்சன் அவர்களுக்கும் இம்முயற்சியில் பெரிதும் உதவிய விரிவுரையாளர் ந. சஞ்சீவன் அவர்களுக்கும் எனது ஆசிகள்.

இந்நூலைப் படிப்பவர்களின் வாழ்வில் கந்தன் அருளால் இன்பமே பொங்கட்டும்.

## வெளியீட்டுரை

**"செவாலியர்"**
**திருமதி சிவயோகநாயகி இராமநாதன்**
ஆதீன கர்த்தா - பொலிகண்டி
கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி
தேவஸ்தானம்.

அருணகிரிநாத சுவாமிகள் முதலாக இற்றைவரை பல அருளாளர்களும் முருகன் அருள்பெற்ற கவிஞர்களும் எமது கந்தவனக் கந்தன்மீது பக்திப்பாக்களைப் பாடிப் பரவியுள்ளனர். லௌகீக வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் நிறைவு வேண்டிப் பாடிய இப் பக்திப்பாடல்கள் கந்தவனக் கந்தனின் அருட்திறனைப் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. அப்பாடல்கள் பிற அடியவரும் பக்தியுடன்பாடி, முருகன் அருள் பெறும் வகையில் உயர்வுநிலை பெற்றனவாய் அமைந்துள்ளன. கந்தவனக் கந்தனின் அருள்பெற்ற தமிழ் அறிஞரும் கவிஞருமாகிய புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் அவர்களின் கந்தவனமணிமாலை எனும் பிரபந்தமும் இத்தகைய சிறப்புக்குரியதாய் அமைந்திருப்பது போற்றுதற்குரியதாகும். எமது ஆலயத்துக்குரிய

பக்திப்பாக்களின் வரிசையில் இந்த நூலும் என்றும் நின்று நிலவும் என்பதைப் பெருமையுடன் பதிவு செய்கிறோம்.

உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் பூட்டன் அவர்களே புலவர்மணி. பக்தர்கள் பாடிப் பயன்பெறும் வகையில் அவர் இப்பிரபந்தத்தை ஆக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இப்பாடல் களால் முருகனைப் பாடித்துதிப்போர் வேண்டியதை வேண்டியவாறு எய்துவர் என்பது உறுதி. சிவசம்புப் புலவரின் புலமைச் சந்ததி பாவினால் முருகனைப் பாடிப்பரவும் சந்ததி என்பதை இப்பிரபந்தம் மூலமும் அறிந்துகொள்ள முடிகிறது. புலவர்மணி கா.நீலகண்டனின் இப்பிரபந்தத்தை வெளியிடும் பேற்றை நாம் பெற்றிருப்பது கந்தனின் திருவருட் செயலே ஆகும்.

சிவசம்புப் புலவரின் கந்தவனநாதர் பதிகம், கந்தவன நாயகர் ஊஞ்சல், கந்தவன நான்மணிமாலை, கந்தவனநாதர் கீர்த்தனம் (1915) ஆகியவை எமது ஆலயத்தின் அருட்சொத்துக்கள். அந்த வரிசையில் புலவர்மணியின் கந்தவன மணிமாலையும் சேர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. புலவர்மணிக்கு நலன்கள் யாவும் கிடைக்கக் கந்தன் அருள் வேண்டுகின்றோம்.

இந்நூல் பதிப்புப் பணியில் பதிப்பாசிரிய ராகச் செயற்பட்டவர், புலவர்மணியின் முதன்மை மாணாக்கன் செல்லத்துரை சுதர்சன் அவர்கள். விரிவுரையாளர் ந.சஞ்சீவன் இம்முயற்சியில் உதவினார். இருவருக்கும் முருகன் அருள் கிடைப்பதாக.

*"சொல்லே குழவர் துதிமாலை சூடு கந்த வனத்தரசே"*

## பதிப்புரை

**செல்லத்துரை சுதர்சன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கந்தவன மணிமாலை என்பதே இப் பிரபந்த நாமம். பாடியவர், சிவசம்புப் புலவரின் பூட்டனும் ஆறுமுக உபாத்தியாயரின் மாணவரும் எனது நல்லாசிரியருமான புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள். இப் பிரபந்தம், "பரவு கந்த சுவாமீ கானகம்" என்று அருணகிரிநாதரால் புகழப்பட்ட பொலிகண்டிக் கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி பேரிலானது. அறுசீர் விருத்தம் எனும் ஒண்பாவில் காப்பு, வாழி நீங்கலாக இருநூற்றிப்பதின்மூன்று பாக்களில் அமைந்தது.

புலவர்மணி அவர்கள் போர்ச்சூழ் நிலையால் கொழும்பில் வசிக்க நேர்ந்த காலத்தில் (2002) கந்தவனத் தலத்தை அகத்தில் தரிசித்துப் பாடியதே இப்பிரபந்தம். சான்று வருமாறு.

கொழும்பு நோக்கிப் பறந்துவந்தேன்
கோவில் புகுமா சாரமில்லை
தொழும்பே ராவ லுறிற்புறத்தே
சுற்றி வந்து தொழுநிலைமை
எழும்பொல் லாப்போ டகத்துன்ப
மெல்லாம் பொறுக்க முடியவில்லை
தொழும்பே றதுவும் போனதுவோ
துய்ய கந்த வனத்தானே.

இப்பிரபந்தத்தில் பக்திப்பிரவாகம் நெஞ்சை உருக்கும் நீர்மையது. இப்பிரபந்த வடிவம் வித்தியாசமானது. புதுமை மிக்கது. பக்திப் பெருக்கால் மரபு இலக்கண அமைப்புக்குள் எளிமையும் புதுமையும் நிறைந்த மாற்றம் புலவர்மணியும் அறியாமல் நிகழ்ந்துவிடுகிறது. இதனைப் பிரபந்த அமைப்பு உணர்த்துகிறது. தூது முதல் ஊஞ்சல் வரையான பல்வேறு அமைப்புக்களின் சங்கமமாய் எளிய தமிழில் கவித்துவ வீச்சோடு உருவான பிரபந்தமாக இது மிளிர்கிறது. கந்தவன முருகனை ஞானவடிவமாய்க் கண்டு தரிசிக்கும் அதேவேளை அவனைக் குழந்தையாக்கி மடியிற் கிடத்தித் தலாட்டியும் பக்தியில் திழைக்கிறது புலவர்மணியின் உள்ளம்.

பந்தவனத்தில் சிக்கியோரை ஈடுகூற வொண்ணாத இன்பக் கந்தவனத் தலத்தை நோக்கி வழிகாட்டுவதும் செம்மறைகள் தேடும் வனமாகத் திருவாழ் கந்தவனத் தலத்தை உரைப்பதும் புலவோர்க்கு அருள் செய்த திறத்தை வியப்பதும் மாலுமயனும் அறியாத குமரன் கந்தவனத்தில் வாழ்வதாக வாயாராப் புகழ்வதும் கந்தவனத்துத் திருவீதி தொடக்கம் அவன் திருநீறுவரை தித்திக்கும் மருந்து என்று சிறப்பிப்பதும் கன்னித் தமிழும்

சிவநெறியும் தழைக்க வந்த கந்தவனக் கடவுள் என்று தரிசிப்பதும் சைவ சித்தாந்தம் காட்டும் ஒப்பற்ற "பதி", கந்தவனம் வாழ் பதியே என்று கண்டு கொள்வதும் புலவர் மணியின் உயர்பக்திச் சிறப்பிற்காம் உரைகற்கள்.

புலவர்மணிக்குப் பாடும் பணியே பணி யென்று அருளியவன் கந்தவனக் கந்தன். புலவர் மணிக்குச் சிவசம்புப்புலவரின் மாணாக்கரும் மருகரும் புலவர்மணியின் பாட்டனாருமாகிய சு.ஆறுமுக உபாத்தியாயர் கந்தவனத் தலத்தில் ஏடு தொடக்கி வைத்தார். ஏடு தொடக்கிய தினத்திலிருந்து பக்தியால் முருகனைப் பாடத் தொடங்கிய, வாழ்வின் ஆரம்ப நிகழ்வைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

ஏடு தொடக்கி யெழுத்தாணி
ஏந்த வைத்தா னின்றலத்தில்
பீடு மிகுந்த வாறுமுகப்
பேரா ராசா னென்பாட்டன்
நீடு மென்ற னுளத்திலது
நிகரில் லின்ப நிகழ்ச்சியதே
பாடு புகழ்சேர் கந்தவனப்
பரமா வாறு முகத்தரசே.

ஆறு முகனின் றிருமுன்னர்
ஆறு முகப்பே ருள்ளகுரு
வீறு மிகுந்த கருணையினால்
வித்யா ரம்பஞ் செய்துவைக்க
ஏறு பத்தி யாலுன்ற
னிணைத்தாட் சீரைப் பாடலுற்றேன்
வீறு சைவ மரபேறு
மேன்மைக் கந்த வனத்தானே.

அன்றிலிருந்து இற்றைவரையுமான தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள், சமூகநிகழ்ச்சிகள் முதலிய

வற்றையும் பல்வேறு பாக்களில் பதிவு செய்துள்ளார். ஆறுமுக உபாத்தியாயருக்குச் சிதம்பரம், திருச்செந்தூர் ஆகியவற்றைத் தரிசிக்கச் செய்தமை, சிவசம்புப் புலவருக்குக் கண்ணொளி கொடுத்தமை, சோமசுந்தரப்புலவருக்குக் காசநோய் நீக்கியமை, அல்வைக் கவிஞர் செல்லையாவிற்கு அகட்டில் வந்த நோய் நீக்கியமை, காசியைத் தீண்டிய விஷத்தைப் போக்கியமை, திக்கம் செல்லைய பிள்ளையின் நெடுநாட்பிணி போக்கியமை முதலாய பல அற்புதங்களை நிகழ்த்திய முருகனைக் "கந்தவனத்தி லார்மருந்து" என்று புகழ்கிறார்.

கந்தவனத்தைப்பாடும் கவித்திறன் சிவசம்புப் புலவர் மாணவர் பரம்பரைக்குத் தொடர்ச்சியாகப் பெருக வேண்டும் என்றும் வேண்டுகிறார். இன்னும் சிவசம்புப் புலவர் "மேலுமொரு தாய்வயின் விடுத்திடினு மாசைவ மெய்ந்நிலையி நிற்க வருள்க" என்று வேண்ட, புலவர்மணி "சாரும் பிறவியனை த்திலுமே சைவனாகப் பிறக்கவருள்" என்று வேண்டுகின்றார்.

கந்தவனக் கந்தன் மீது பக்தி செலுத்தி அவர் பாடிய இப்பிரபந்தத்தில், அமைந்த பாவொன்று தமிழுக்குரிய முக்கியமான வேண்டுதலாக அமைந்திருந்தது. அவ் வேண்டுதலைக் கந்தன் நிறைவேற்றியிருப்பதும் அவன் அற்புதங்களில் ஒன்று. 2002ஆம் ஆண்டு பாடப்பட்ட இப்பிரபந்த த்தில் வரும் பின்வரும் பா நோக்கத்தக்கது.

போற்று தமிழ்க்கோ சிவசம்புப்
புலவன் செய்த கவிகளையச்
சேற்றி வெளியிட் டுயரறிஞர்
இன்ன வாவைப் பூர்த்திசெயும்
பேற்றை யெளியேற் குற்றருள்வாய்
பேணித் தேகம் விழுமுன்னம்
சாற்ற வொணாச்சீர்க் கந்தவனத்
தளியுற் றாடும் வேலவனே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துப் பெரும் புலவரான உடுப்பிட்டி சிவசம்புப்புலவரது கவிகளை அச்சேற்றி, வெளியிட்டுத் தமிழ் அறிஞர்களின் அவாவைப் பூர்த்தி செய்யும் பேற்றைத் தேகம் விழுவதற்கு முன்னர் அருள வேண்டும் என்று கந்தவனக் கந்தனை வேண்டுவதே மேற்படி பாடல்.

தமிழகத்திலும் ஈழத்திலும் உயர்தனிச்சிறப்புப் பெற்ற சிவசம்புப் புலவரது கவிதைகள் காலத்தால் அழிவுண்டு போயின. அச்சேறியவையும் பல அழிவுற்றன. போர்ச்சூழ்நிலையில் சில எரிந்தன. இந் நிலையில் சிவசம்புப்புலவரின் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை எங்கு தேடிப் பெறுவது என்பது வலியுடன்கூடிய பெருங்கேள்வியாகவே இருந்தது. ஆனால் கந்தவனக் கந்தன் அருளால் 05.01.2014 அன்று "உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு - தேவபாகமும் மானுடபாகமும்" எனும் பெருநூலாய் வெளிவந்து, புலவர்மணியின் வேண்டுதல் நிறைவேறியது. இச்செயலைத் தமிழுலகம் போற்றியது. புலவர்மணியின் தூய்மையான பக்திக்கும் அவரது பாவில் இருக்கும் அருட்சக்திக்கும் கந்தவனக் கந்தனின் அற்புதத்துக்கும் தமிழுலகம் என்றும் தலை வணங்கும்.

"கந்தவனத்தைப்போல் இந்தத் திசைதனில் கண்டதலமேதோ சுகங் கொண்டதலமேதோ" என்று சிவசம்புப்புலவர் பாடியதைப் போல, புலவர் மணியும் பல இடங்களில் கந்தவனத் தலத்தைப் பந்தம் அறுக்கும் தலமாகப் பற்றி நிற்கிறார். பிரபஞ்சம் அனைத்தும் கந்தவனத் தலத்தில் இருந்தே தோன்றி ஒடுங்குவதாகப் புலவர்மணி காண்கிறார். பழத்தில் இருந்து சுவையைப் பிரிக்க முடியாத நிலை போன்ற தன்மையை அப்பிரதக்சித்திநிலை என்பர். கந்தவன முருகனும் அடியவரினின்றும் நீங்காதவன் என்பதைத் "திருவாழ் கந்தவனப் பழம்" எனப் பதிவு செய்கிறார்.

இப்பிரபந்தத்தைப் புலவர்மணியின் இல்லத்தில் தேடியெடுத்துக்கொண்டேன். அச்சேற்ற விருப்பங் கொண்டேன். ஆசி தந்தார். எனக்குத் தமிழ் தந்த நல்லாசனின் பிரபந்தத்தைப் பதிப்பிக்கும் பணியேற்றது குருவருளும் கந்தவனத் திருவளுமே யன்றி வேறில்லை. பணிகின்றேன்.

ஆசிச்செய்தி வழங்கிய பிரதமகுரு சிவப்பிரம்ம ஸ்ரீ ச.வைத்தியநாதக்குருக்கள் அவர்களுக்கு என் நன்றி. ஆதீன கர்த்தா திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அம்மையார், தேவஸ்தான வெளியீடாக இதனை வெளியிடுவதைப் பெரும் பேறெனக் கருதினார். என் ஆசான் மீது அவர் கொண்ட பெருமதிப்புக்கு என்றும் நன்றியுடையேன். இந்த இறைமுயற்சியில் உதவிய ந.சஞ்சீவன், திரு. நீ.நித்தியானந்தன், திரு.பூ.சோதிநாதன், பேராசிரியர் துரை.மனோகரன், செல்வி.செ.செல்வரஞ்சினி, திரு.க.சதோபன் ஆகியோர்க்கும் அச்சிட்ட குருபதிப் பகத்தாருக்கும் நன்றியுடையேன்.



புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் இயற்றிய

# கந்தவன மணிமாலை

# கந்தவன மணிமாலை

**காப்பு**

அறுசீர் விருத்தம்

அந்த மாதி யில்லாத
வானை முகத்தெம் பெருமானே
செந்த மிழ்த்தே னாழியதிற்
றிழைக்குங் கந்த வனமுருகன்
கந்த மலர்த்தாட் கியன்மாலை
கடையேன்புனையத் துணையாவா
யந்த முருக னின்றம்பி
யான தன்மை யதனாலே.

## நூல்

பொன்னார் மேனிப் புரிசடையோன்
    புதல்வா கந்த வனமேவு
மின்னார் சோதி யயிற்குமரா
    வேலும் மயிலுந் துணையென்ன
எந்நே ரமுமென் னாவுரைக்க
    என்னை முற்றாய் மறந்ததனி
யின்ப மாந்தி யிருக்குநிலை
    யெய்தி நிற்ப தென்றுகொல்லோ. (1)

பாடு புலவோர் தங்களிடர்ப்
    பாடு யாவும் பறந்தோட
நீடு பேரின் பாழிதனில்
    நிலையா யுற்றுத் திளைத்தாட
ஈடு கூற வொண்ணாத
    வின்பக் கந்த வனத்தலத்தான்
ஆடு மயின்மீ தேறிவரு
    மவன்றா ளிணையைப் போற்றுமினே. (2)

பொய்யில் கீரன் முதலாய
    புலவோர் மாலை புனைந்தேத்தி
யெய்தற் கரிய மாபெரும்பே
    றெய்தி யுய்தி யதுபெற்றார்
வெய்ய வினையே னதைவெட்டி
    மெய்யின் புய்தி பெறலன்றோ
செய்ய தமிழ்வாழ் கந்தவனச்
    செம்பொற் றளிவாழ் வேலவனே. (3)

செய்ய தமிழ்ப்பா வைவுக்குஞ்
சிந்தைக் குளிர்ச்சி யாகவருள்
செய்யும் வள்ள லெனவாப்தர்
செப்பி னார்க ளதையோர்ந்தே
துய்ய மறைவாழ் கந்தவனச்
சுந்த ராவிக் கடையேனு
முய்ய வருள்வா யுனையன்றி
யிங்குற் றருளவாருளரே. (4)

நீல மயிலூர் கந்தவன
நிமலா விரிந்து பரந்தவிந்த
ஞால வுயிர்கட் குயிரான
நாதா சுவையின் செழுந்தமிழால்
கால மெல்லா முன்றனருட்
கமலத் தாட்சீர் தனைப்பாடிச்
சால மகிழ்ச்சி கொள்ளவரந்
தருவாய் தருவாய் தருவாயே. (5)

எல்லாம் வல்ல பெருமானின்
னிணையி லின்ப வருட்புகழை
யெல்லாம் வடித்துத் திரட்டியொன்றாய்
இனிய தழிழி லழகாகச்
சொல்ல வல்லே னல்லன்காண்
தொன்மைக் கந்த வனத்தமலா
பொல்லேன் றனக்கா மாற்றலின்மை
பொறுத்தவ் வாற்றல் நல்குதியே. (6)

பூவே பூவி னறுமணமே
    பொன்னே பொன்னின் தண்ணொளியே
பாவே பாவின் றனிச்சுவையே
    பரிவே பரிவின் றிருவுருவே
தேவே தேவர் சிறைமீட்ட
    சிவமே வளஞ்சேர் கந்தவனக்
கோவே நின்றாள் தஞ்சமெனக்
    கொண்டே னென்னை யாண்டுகொள்ளே.(7)

மூன்று கண்ணான் றந்தபிரான்
    மூன்று தமிழைத் தந்தபிரான்
தேன்றார் நீபஞ் சூடுபிரான்
    தேவர் சிறையை மீட்டபிரான்
தோன்றாத் துணையா யுள்ளபிரான்
    துதிப்போ ரகத்து மேவுபிரான்
வான்றா னென்ன விளங்குகந்த
    வனத்தில் நீங்கா துறைபவனே. (8)

கடையேன் முன்னாட் செய்வினையே
    கடுத்துச் சால வருத்தவெனை
யுடையாய் நினையே நொந்தழிவேன்
    உழுதேன் விதைத்தே னறுப்பவன்யான்
யடையே னுள்ளத் தெளிவீதுற்
    றனுப வித்தே தீர்ப்பதொன்று
கொடையின் பொற்பார் கந்தவனக்
    குமரா வுற்ற துணைநீயே. (9)

ஊனா ரிந்தக் குடிலகத்தி
லொன்று வாழ்வு தனைக்கொண்டேன்
யானா ரென்ப தறிதலின்றி
யிங்கார் மயக்கி லுற்றழிவேன்
றானா யுள்ள வெளியேனைத்
தாங்கிக் கொள்ளாய் கருணையிரு
மானா ரிடையில் மேவுகந்த
வனத்தில் வாழு முருகோனே. (10)

வெண்ணீ றன்ன மணல்வீதி
விளங்கு கந்த வனத்தளியி
லுண்ணீ டொப்பில் பத்தியினால்
நெஞ்ச முருகத் தொண்டரொடு
பண்ணீ டின்பப் பஜனைசெயும்
பணியி னாளு மீடுபட
எண்ணீ டல்லல் தொல்லையெலா
மில்லா தோடிப் பறந்திடுமே. (11)

மருவே யெனக்கு வாய்த்தகண்ணின்
மணியே தொழுவார்க் கிரங்கியருள்
தருவே யெங்கள் தமிழன்னை
தவமே கந்த வனமேவு
திருவே நாலு மறைக்குமெட்டாத்
தேவே மன்றி லாடுசிவ
குருவே யெளியன் பவரோகங்
கொடுகி யழிய வந்தருளே. (12)

கால காலன் றனதுநெற்றிக்
　　கண்ணி லிருந்து தோற்றமுற்றோன்
கோல மஞ்ஞை மீதுவரு
　　குழகன் கந்த வனக்குமரன்
சீல மில்லாச் சிறியனிவன்
　　சிந்தைக் குகையிற் புகுந்தொளிர்வான்
சால வின்பிற் புணர்த்திடுவான்
　　தமியேற் கென்ன குறையினியே. (13)

கந்த வனத்தான் வேலுண்டு
　　கதிகொள் நீல மயிலுண்டு
கந்த மலர்த்தா ளிணையுண்டு
　　கருது வேறு படையுண்டு
நந்த லில்சீர் நாவுண்டு
　　நவிலின் சுவைத்தேன் பாவுண்டு
எந்த வகையா மிடர்த்தொகையு
　　மெம்மை யென்ன செயுமினியே. (14)

துதிசூ டயிற்கைக் குமரேசன்
　　சொல்லின் றமிழ்தேர் குமரேசன்
விதிமா லறியாக் குமரேசன்
　　மின்னா ரிருவர் குமரேசன்
மதியை குருவாங் குமரேசன்
　　மயின்மீ தூருங் குமரேசன்
கதியே யான குமரேசன்
　　கந்த வனத்துக் குமரேசன். (15)

மாவின் குயில்க ளிசைபாடும்
மருதங் கிளிகள் அணிசெய்யும்
பூவின் வண்டர் சுதிகூட்டும்
பூவைக் கணங்கள் லயமூட்டும்
ஆவின் நிரைகள் ரசித்து நிற்கும்
அழகு மயில்க ளாடிநிற்கப்
பாவி னின்பச் சுவையமிழ்தம்
பரவுங் கந்த வனத்தலத்தே. (16)

பிட்டுக் காக மண்சுமந்த
பெருமான் றந்த இளவழகன்
செட்டுக் கார னினியதமிழ்த்
தேனை மாந்து பொற்சிட்டு
கட்டுக் காவ லில்லாத
கானிற் குறமின் றனைக்கவர்ந்தோன்
துட்டுக் குறைவில் கந்தவனத்
துரையா மெங்கள் வேலவனே. (17)

ஆனை முகனுக் கிளையவள்ளல்
ஆடு மயிலூரழகுவள்ளல்
வானை வாழ வைத்தவள்ளல்
வள்ளி மினையாட் கொண்டவள்ளல்
தேனை யுகுக்கும் நீபவள்ளல்
செய்ய தமிழைத் தந்தவள்ளல்
ஊனை யென்பை யுருக்கியுளத்
தொளிருங் கந்த வனத்துவள்ளல். (18)

கனக வேத கோடுதுங்
கண்ணன் மகிழுந் திருமருகன்
கனக மலரில் லயனகந்தை
கருகக் குட்டு மாமுதல்வன்
தினக ரர்கள் பலகோடி
சேர்ந்த தென்னக் கந்தவனச்
சினக ரத்தி லுற்றொளிருஞ்
சிறியே மெம்மை மீட்கவென்றே. (19)

அருணைத் தலத்துக் கோபுரத்தி
லருண கிரியை மீட்டவொப்பில்
கருணைத் திறத்தான் கந்தவனக்
கதிர்வேற் கரத்தா னென்றனக
இருணைந் தறவே யருள்பொழிவான்
இருநீ லாழி முகந்துவரு
தருண முகிலு நனிநாணித்
தயங்கி யொரூபா லொதுங்கிடவே.(20)

பார்வ தித்தாய் கொஞ்சுமுத்தம்
பைந்த மிழ்மின் நெஞ்சமுத்தம்
சூர்வேர் கிளைக ளஞ்சுமுத்தம்
துதிசெய் தன்பர் கெஞ்சுமுத்தம்
சார்நான் மறையை விஞ்சுமுத்தம்
தமிழ்ப்பா வாணர் தஞ்சமுத்தம்
கார்வாழ் சோலைக் கந்தவனங்
களிக்கும் வேற்கைக் கதிர்முத்தம். (21)

ஒவ்வா நெறியிற் செல்பவர்க
ளொன்றாக் கந்த வனக்குமரன்
அவ்வை யன்னை யவணாண
மடையச் சுட்ட பழங்கேட்டான்
கொவ்வைக் கனிவாய்க் குறமின்முன்
கூனிக் குறுகி யிரந்துதன்முன்
அவ்வா ரணத்தைத் துணையாக
அழைத்து நின்ற வதுமென்னே. (22)

ஆழிக் கடலி னலையொலியோ
அடியர் குழாத்தின் போற்றொலியோ
கோழித் துவசங் கூவொலியோ
கோல மஞ்ஞை யகவொலியோ
மேழிக் குலத்தோர் கடவொலியோ
மின்னா ரிருவர் சுவைமொழியோ
வீழிக் கந்த வனமுருகா
வினையே மொலியை மூடுவதே. (23)

சிவனார் தந்த ஆண்பிள்ளை
செயமே மிகுத்த வேற்பிள்ளை
பவநோய் தனைக்கொல் தாட்பிள்ளை
பழகு தமிழின் றார்ப்பிள்ளை
குவடு தோறுறா றாடுபிள்ளை
குலமின் னிருவர்க் கானபிள்ளை
நவகோ ளிடரைச் சாடுபிள்ளை
நவில்சீர்க் கந்த வனப்பிள்ளை. (24)

இன்னல் கங்கு கரையின்றி
　　யென்னை வருத்து நிலையதிலும்
இன்ப வாழி தனின்மூழ்கி
　　யிருக்கு மந்த நிலையதிலும்
உன்னை மறவா திருக்கவரம்
　　உள்ள முவந்து தந்தருள்வாய்
கன்னல் வாழை செழித்தோங்கு
　　கந்த வனத்தெம் பெருமானே. (25)

பாச வலையிற் பட்டேனின்
　　பாத மலரை மறந்தாலும்
நேச மிகுமுன் றிருவுளத்தால்
　　நினைவு றுத்தி மீட்டுனது
தாச னாக வெப்பிறப்புந்
　　தவறா தின்றொண் டாற்றவருள்
வாச மலர்த்தண் பூஞ்சோலை
　　மருவு கந்த வனத்தரசே. (26)

பற்றா மாய்க்குஞ் சேற்றிலுற்றுப்
　　பாழ்த்த பிறவி தனையெடுத்தேன்
உற்றா ருறவோ ருடன்பிறந்தார்
　　ஊரார் நண்பர் மனைவிமகார்
மற்றா ரெவரு மியைதுணையாய்
　　வாரார் முடிலாங் கடைவழிக்குன்
பொற்றா ளிணையே யானதுணை
　　புகழ்சேர் கந்த வனத்துரையே. (27)

அம்மை யப்ப னானபழம்
அரிய தமிழு மானபழம்
உம்ப ரமிழ்து மவாவுபழம்
உவந்து புலவர் பாடுபழம்
வெம்ப வத்தை யோட்டுபழம்
மின்னா ரிருவர்க் குரியபழம்
செம்ம றைகள் தேடுபழம்
திருவாழ் கந்த வனப்பழமே. (28)

தந்தை கரத்தி லுற்றகனி
தன்னைப் பெற்றுக் கொளவேண்டி
அந்த மயின்மீ தேறியண்ட
மனைத்துஞ் சுற்றி யொருகணத்தில்
வந்து மந்தக் கனிபெறாத
வருத்தந் தானோ கந்தவனத்
தெந்தை குழம்பி யாண்டியாய்
எழுந்து போனான் மர்மமென்ன. (29)

ஆழி வரள வேல்விட்டாய்
அந்தக் கணக்கி லென்பிறவி
ஆழி வரள வேல்விட்டா
லடியே னுய்தி யடையேனோ
காழி யிடத்தி லவதரித்துக்
கன்னித் தமிழுஞ் சிவநெறியும்
ஊழி யூழி நிலைக்கவைத்த
ஒப்பில் கந்த வனத்திறையே. (30)

குன்று தோறு மாடிமகிழ்
கொள்வாய் கடையேன் நிண்ணியவுட்
குன்று மேநீ யாடிடமாய்க்
கொண்டா லுன்றாள் கன்றிடுமோ
ஒன்று பிறவிப் பிணிநீங்கி
யொப்பில் பேரின் படையேனோ
என்று மாறா விளமையுடன்
இலங்கு கந்த வனமுதலே. (31)

தேனிற் றினைமாப் பிசைந்துவள்ளி
தின்னத் தந்தா ளதற்கடவன்
ஊனி லுயிரிற் கலந்ததன்றி
யுன்னோர் பாகத் தொளிரவைத்தாய்
தேனிற் சிறந்தே யடியார்தஞ்
சிந்தை யதனிற் றித்திப்பாய்
வானிற் றிகழுங் கந்தவனம்
மருவி வாழும் வேலவனே. (32)

அப்ப னவன்றா னிரந்துண்ணி
யாத்தா ளவளோ மலைநீலி
ஒப்பில் மாம னுறிதிருடி
யுற்ற முன்னோன் குடவயிறன்
செப்பு காதன் மயில்குறத்தி
தீன ரடியர் வாய்த்தசுற்றம்
தப்பு மருவா நெறியினர்கள்
சாருங் கந்த வனத்தாற்கே. (33)

கன்னி மார்க ளோரிருவர்
களித்து மேவ விருமருங்கும்
வன்னி மரத்து நீழலிலே
வைகுங் கந்த வனத்தாயென்
சென்னி யுன்றன் திருவடியிற்
சேர்த்துத் தமிழாற் றுதித்திறைஞ்சி
மன்று பவநோய் தனைமாற்றி
மட்டி லின்ப முறுவதென்றோ. (34)

மதிக்கு மதியா யமைந்தமலர்
மலர்க்கு மலரா யமைந்தமலர்
விதிக்கு விதியா யமைந்தமலர்
விழிக்கு விழியா யமைந்தமலர்
நிதிக்கு நிதியா யமைந்தமலர்
நிலைக்கு நிலையா யமைந்தமலர்
கதிக்குக் கதியா யமைந்தமலர்
கந்த வனத்தி லமைந்தமலர். (35)

விளம்பு மறைகள் நாலுடையான்
விளங்கு கமலக் காலுடையான்
உளம்பூண் தொண்டுக் கோளுடையான்
ஒளிர்குன் றனைய தோளுடையான்
களம்பேண் வெற்றி யயிலுடையான்
கருது திறனீன் மயிலுடையான்
வளம்பெண் கந்த வனத்தலத்தான்
மலியின் சுவைப்பாநுகர்நலத்தான். (36)

கருப்பு மாரற் கோரத்தான்
கருத லார்க்க கோரத்தான்
திருப்பு கழ்ச்சீ ராரத்தான்
திறற்சூ ரவற்கொவ் வீரத்தான்
விருப்பு நிலாவு தாரத்தான்
வேடர் மினைக்கொல் சோரத்தான்
கருப்பு காதாள் மாகருணைக்
கந்த வனத்து வேலவனே. (37)

கலங்கித் தவித்தே யழியுமிந்தக்
கடையனேன்மீ திரங்கிலையே
தலங்கள் போற்றுங் கந்தவனத்
தலத்து மேவி யருள்பொழிவாய்
வலங்கொள் வேற்கை யருளழகா
மனதைத் தூய்மை யாக்குமுயர்
நலங்க ளன்பு மிலனென்றோ
நனியி கந்து விட்டனையே. (38)

மலரின் மென்மை யழிபாதம்
மனமா சுகளைத் தெறுபாதம்
மலரோ னரியுந் தொழுபாதம்
மறையுந் தேட மறைபாதம்
குலமா மயில்கா ணருட்பாதம்
குறமின் புனத்தி லலைபாதம்
புலவோ ருறையுங் கந்தவனப்
புலவன் றண்டைக் கழற்பாதம். (39)

அந்த மாதி யற்றதெய்வம்
அழகே யுருவா யுற்றதெய்வம்
பந்த மலத்தைப் போக்குதெய்வம்
பக்தர்க் கின்பந் தேக்குதெய்வம்
சந்த மறைகட் கரியதெய்வம்
சார்மின் னிருவர்க் குரியதெய்வம்
கந்த நீபஞ் சூடுதெய்வங்
கந்த வனத்தி லாடுதெய்வம். (40)

மன்று ளாடி தந்தமகன்
மருவு சக்தி யுவகையகன்
குன்று தோறு மாடுகுகன்
கொற்ற வேல்கைக் கொண்டசகன்
ஒன்று மிடரோர்க் கிரங்குமுகன்
ஓது கலியி லேற்றபுகல்
கன்று மனத்தோ ரில்லாத
கந்த வனம்வா ழாறுமுகன். (41)

ஈகை குறையாக் கந்தவனத்
திருக்கு மெங்க ளருட்பெருமான்
தோகை மயின்மீ தேறிவருந்
துரையே யுன்றன் துணையடியை
சாகை மீண்டு பிறக்கையெனச்
சாரு மின்ன லழிந்தொழிய
ஓகை யாலென் னுளத்திருத்தி
யுருகி வணங்க வருள்புரியே. (42)

சென்னி யொளிரு மணியாடச்
செவிசேர் பொற்குண் டலமாட
வன்ன நீபத் தொடையாட
மணிசேர் மாலை பிறவாடச்
சின்ன வரைமென் துகிலாடத்
திகழுந் தண்டை கலித்தாட
மன்னு வளங்கள் மலிகந்த
வனம்வாழ் முருகா வருகவே. (43)

ஐயா வருக வற்றாத
அருளே வருக சரவணத்துப்
பையா வருக அம்மையப்பன்
அமுதே வருக மஞ்ஞையயிற்
றுய்யா வருக தமிழ்ச்சுவைதேர்
துரையே வருக வாறிரண்டு
கையா வருக கந்தவனக்
கடம்பா வருக வருகவே. (44)

மருவே வருக மருவுகுக்கும்
மலரே வருக கேட்பதருந்
தருவே வருக சூர்க்குலத்தைத்
தடிந்தாய் வருக தந்தைசிவ
குருவே வருக குறமினையாட்
கொண்டாய் வருக வார்புவனக்
கருவே வருக கந்தவனக்
கடம்பா வருக வருகவே. (45)

வேலா வருக வொப்பிலருள்
விமலா வருக வோதுமறை
நூலா வருக பக்தரகம்
நுழைவாய் வருக தாயறுவர்
பாலா வருக குன்றாடு
பவனே வருக செங்கமலக்
காலா வருக கந்தவனக்
கடம்பா வருக வருகவே. (46)

மதியே யொளியே வருகபுது
மலரே மருவே வருகவகத்
துதியே யுயிரே வருககவித்
தொடையே ரசமே வருகவலி
விதியே பயனே வருககலை
விதமே யின்பே வருகவெங்கள்
கதியே வருக கந்தவனக்
கரும்பே வருக வருகவே. (47)

வருக சுட்ட பழமளித்தாய்
வருக காழிப் பதியுதித்தாய்
வருக வானோர் சிறைமீட்டாய்
வருக பகழி சுவைப்பாட்டாய்
வருக குன்றப் போர்புரிந்தாய்
வருக வெங்கு மேவிரிந்தாய்
வருக ராஜ கெம்பீரா
வருக கந்த வனவுதாரா. (48)

வருக வருக வுமைபுதல்வா
    வருக வருக சகமுதல்வா
வருக வருக வயிற்கரத்தாய்
    வருக வருக வரையுரத்தாய்
வருக வருக மயிற்பரியாய்
    வருக வருக தமிழ்ப்பெரியாய்
வருக வருக செவ்வனத்தாய்
    வருக கந்த மாவனத்தாய். (49)

மாசு மறுவி லிதயத்தே
    மருவு பத்திப் பெருக்கதனால்
ஆசு மதுரம் வித்தாரம்
    ஆன கவிதை விதங்களிலே
தேசு குலவு கந்தவனச்
    செல்வா வுன்றன் றிருவடிச்சீர்
பேசு பாக்யந் தந்தருள்வாய்
    பேதை நாயிற் கடையேற்கே. (50)

இன்பத் தமிழால் வைபவர்க்கும்
    இல்லை யென்னா தருள்சுரக்கும்
பன்னி ரண்டு கட்கமலப்
    பரமா கந்த வனத்தளியின்
மன்ன குமரா வெளியேனை
    வாட்டி யடர்க்கு மிடரையெலாம்
வன்னி சருகை யெரிப்பதுபோல்
    மாள வெரிப்ப தெந்நாளோ. (51)

அல்லும் பகலு முன்றனடி
　　யருச்சித் தேத்தி யகங்குழையேன்
சொல்லும் பொருளும் பொருந்துகவி
　　தொடுத்துப் பாடி வலமேவேன்
கொல்லும் வினையை முற்றாகக்
　　கொன்றுன் கமல விணைமலரைப்
புல்லும் பேறு பெறுவதென்றோ
　　பொற்பார் கந்த வனத்திறையே. (52)

நினைப்பு மறப்பு மற்றவந்த
　　நிலையில் வள்ளி புரந்திருந்த
தினைப்பு னத்துப் பரப்பெல்லாந்
　　திரிந்து ழன்ற கந்தவனப்
பனைப்பு லத்து வேலவற்கு
　　பாழ்த்த வினையின் பிணிப்புடையேன்
நினைப்பு மொருகால் வந்திடுமோ
　　நீடின் புறுவ தென்றுகொலோ. (53)

ஐஞ்சு புலனும் புரிசேட்டை
　　யான கொஞ்ச நஞ்சமல்ல
நெஞ்சு செய்யும் வஞ்சனையை
　　நினைக்க நினைக்கப் பெருநடுக்கம்
உஞ்சு நிலைக்கு மாற்றலிலா
　　ஊத்தை யேனுக் குனதுபதக்
கஞ்ச மன்றித் துணையேது
　　கந்த வனம்வாழ் வேலவனே. (54)

நஞ்ச முயிரை யுடன்போக்கும்
நண்ணி நிற்கும் புலனிவைகள்
கொஞ்சங் கொஞ்ச மாயீர்க்குங்
கொடுமை தாங்க முடியாதிவ்
வெஞ்ச மத்துக் கெதிர்நிற்கும்
வீறாப் பிலையிக் கடையேற்குத்
தஞ்ச முன்ற னிணைமலர்த்தாள்
தமிழ்வாழ் கந்த வனத்திறையே. (55)

அன்ப ருளத்து மலரும்பூ
அகில வுயிர்கட் குயிராம்பூ
இன்பத் தமிழ்ப்பா வணியும்பூ
இரியா வினையை எரிக்கும்பூ
வன்ன மஞ்ஞை காணும்பூ
மங்கை யுமையாள் கொஞ்சும்பூ
கன்னி யிருவர் வருடும்பூ
கந்த வனத்தா னிருதாட்பூ. (56)

அந்தா மரையு மவாவும்பூ
அயன்மா லின்னு மறியாப்பூ
நொந்தா ருளத்தை நோக்கும்பூ
நுண்ணி யோர்க்கும் நுண்ணியபூ
சந்த மறையு முணராப்பூ
தமிழெம் மன்னை சென்னிப்பூ
கந்த நீப மகிழும்பூ
கந்தா ரணிய மன்னும்பூ. (57)

எந்தப் பிறவி கடைநாயேன்
எடுத்து மீண்டு மீண்டுறினு
அந்தப் பிறவி தோறுமற
வாம லென்னை யாட்கொண்டுன்
செந்தா மரையின் றாட்சீரைச்
செய்ய தழிழ்ப்பா விற்றொடுக்க
கந்த வனம்வா ழெம்பெருமான்
கருணை யோடுற் றருளாயே. (58)

பாசப் பிணிப்பி லுற்றேனின்
பாத மலரை மறந்தாலும்
நேச மிகவே தொடர்ந்தெற்கு
நினைவு றுத்தி நின்னடிச்சீர்
பேச வருள்வாய் தமிழ்க்கவியால்
பேதை யியல்பை நனிபொறுத்தே
வாச மலர்க்கா மருவுகந்த
வனத்தில் வாழும் வேலரசே. (59)

அனிச்ச மாலை யணிந்துள்ளாய்
அருகே யிருவ ரமர்ந்துள்ளார்
பனிச்ச தொண்டர் விழிநடுவாய்
பாடு புலவோ ரிடையிலுள்ளாய்
இனிச்ச பாவின் சுவைநுகர்வாய்
இயைந்த தொண்ட ரேத்துவப்பாய்
தனிச்ச நாயேன் மேற்சினமோ
தவம்வாழ் கந்த வனத்தானே. (60)

விண்கார் புவனஞ் செழிக்குமழை
மிளிர்ப்பூஞ் சோலை நறவமழை
பண்கோ குலந்தேன் கானமழை
பாவ லோர்கள் கவிதைமழை
நண்ணு செல்வர் கனகமழை
நவையி லன்ப ருவகைமழை
தண்காக் கந்த வனமுருகன்
தாட்பூ பொழியுங் கருணைமழை. (61)

பாநீ பாவின் பொருளும்நீ
பாவாக் காற்றல் தந்தவன்நீ
பாவாக் கிடுவோ னவனும்நீ
பாவி யேனின் கைப்பொம்மை
மேவு வன்மை யேதுமிலேன்
மீட்சி தருவ துன்றாளே
காவி மலரின் தடமேவு
கந்த வனத்தெம் முருகோனே. (62)

கல்வி கேள்வி யில்லாதேன்
கசடா மனைத்தும் நீக்காதேன்
சொல்லு நெறியிற் செல்லாதேன்
தூயோர் தொடர்பு மில்லாதேன்
வல்ல புலனை யடக்கேனின்
மலர்த்தாட் காளா யமைவதென்றோ
மல்லன் ஞாலம் போற்றுகந்த
வனத்தில் வாழு முருகோனே. (63)

நண்ணு பிறவி தோறுமுன்றன்
நளினத் தாளை மறவாமல்
எண்ணு பேறு முளமுருகி
இனிய தமிழ்ப்பா புனைந்துபூசை
பண்ணு பேறு மகிழ்ந்தருள்வாய்
பாவை மார்க ளோரிருவர்
கண்ணு முளமு நிறைந்திலங்கு
கந்த வனம்வா ழழகுருவே. (64)

கருது பகழிக் கூத்தனல்லன்
கச்சி யப்பா சாரியல்லன்
மருவு போரூர்ச் சாமியல்லன்
மன்னு சீர்நக் கீரனல்லன்
கருணை யருண கிரியல்லன்
கலிவெண் பாச்செய் புலவனல்லன்
செருவில் கந்த வனத்தான்சீர்
சிறிய னேனோ செப்பவல்லன். (65)

கருது பகழிக் கூத்தனாகக்
கச்சி யப்பா சாரியனா
மருவு போரூர்ச் சாமியாக
மன்னு சீர்நக் கீரராகக்
கருணை யருண கிரியாகக்
கலிவெண் பாச்செய் புலவனாகச்
செருவில் கந்தா ரண்யனெனைச்
சென்ம மெடுக்க வைத்திலனே. (66)

எந்த வனத்திற் சிக்கினார்க்கும்
என்றோ ஒருநாள் மீட்சிகிட்டும்
பந்த வனத்திற் சிக்கினோம்யாம்
பரிந்து மீட்ப ரெவரென்று
நொந்த மனத்த ராகிநிதம்
நுடங்கி யேனோ வழிகின்றீர்
கந்த வனத்தை நண்ணியுள்ளங்
கரைந்து வேண்டி யழுதிரப்பீர். (67)

குன்றந் தோறு நிதமாடிக்
குன்றா வுன்ற னருளுள்ளங்
குன்றா யிறுகி வலுத்ததுவோ
குன்றா வருளின் குணக்குன்றம்
என்றா ராப்த ரனைவோரும்
என்றோ சிறியேற் குன்றனருள்
குன்றா வளஞ்சேர் கந்தவனங்
குலவு வேற்கைக் குருபரனே. (68)

என்று முன்ற னிணையடியை
இதய சுத்தி யோடுசுவை
ஒன்று பாக்கள் புனைந்திறைஞ்சி
ஓடு புலனை மயக்குமவை
ஒன்றுங் கருதா துன்னினைவால்
ஊனை யுயிரைத் தான்மறந்தே
என்று கொல்லோ இருந்திடுவ
தெங்கள் கந்த வனமணியே. (69)

எந்த மிடரை யெலாமோட்டும்
இன்பஞ் சாந்தி யிவையூட்டும்
புந்தித் தெளிவு தனைக்கூட்டும்
புலமை யறிவு நனியூட்டும்
பந்த பாசந் தனைவீட்டும்
பரக திச்சேர்த் தின்பூட்டும்
அந்த மிலாச்சீர்க் கந்தவன
மகலா துறையுஞ் செவ்வேளே. (70)

போற்று தமிழ்க்கோ சிவசம்புப்
புலவன் மறைகண் ணொளிவேண்டிச்
சாற்று தமிழின் றொடைவகைக
டமக்காய் மீண்டு மவ்வொளியை
யேற்றி வைத்த வருட்செயலுக்
கிணையொன் றெடுத்துக் கூறரிதே
நோற்றுக் கந்த வனத்திருப்போர்
நுவலு மின்ன லடையாரே. (71)

மின்னா ரிருவ ரிருமருங்கும்
மிளிர வடிவேல் கரத்தொளிர
கொன்னார் நீபம் புயத்தசைய
குலுங்கு சதங்கை தாளிலுற
பொன்னார் மயிலா ருன்கோலம்
புலையேன் விழியி னெஞ்சிலென்றும்
மன்ன வின்பக் கந்தவன
மணியே யருள்வா யருள்வாயே. (72)

தொல்லை யற்ற சுகவாழ்வைச்
சுகிப்ப தற்கே நினைவணங்கும்
புல்ல னாக விரும்பேன்யான்
பொருந்து புலன்க டமையடக்கி
எல்லை யில்லாப் பத்தியினின்
னிருதாள் போற்றி யிறைஞ்சவருள்
சொல்லே ருழவர் துதிமாலை
சூடு கந்த வனத்தானே. (73)

வாரி குளித்த சுடர்வடிவேல்
மாவைத் தடிந்த சுடர்வடிவேல்
சூரைப் பிழந்த சுடர்வடிவேல்
துட்டக் குறட்கொல் சுடர்வடிவேல்
தீர மிகுந்த சுடர்வடிவேல்
திகழு ஞானச் சுடர்வடிவேல்
மாரி யருள்வே லெங்கந்த
வனத்தான் கரத்துச் சுடர்வடிவேல் (74)

கடையேன் றுணையா யொருளிரும்வேல்
கலங்கு வோர்க ளருகார்வேல்
மடைதி றந்த வெள்ளம்போல்
வரும்பே ரருளில் தோய்க்கும்வேல்
தடைக ளெவைதான் குறுக்கிடினுஞ்
சாம்ப ராக்கி மேவும்வேல்
நடையின் சிறப்பார் கந்தவன
நாதன் கரத்துச் சுடர்வடிவேல். (75)

செந்த மிழ்ப்பா வணியும்வேல்
செப்பு கலங்கள் வணங்கும்வேல்
வந்த னைக்குள் ளிரங்கும்வேல்
மனமா சுகளை நீக்கும்வேல்
எந்த மிடரை யெரிக்கும்வேல்
இணையில் வீரத் தனிநெடுவேல்
கந்த மலர்க ளணிபெறும்வேல்
கந்த வனத்தான் சுடர்வடிவேல். (76)

கோல மடவா ரோரிருவர்
குலவ ரண்டு பக்கத்தும்
நீல மயிலின் மீதுநறை
நீபத் தெடுநீ கந்தவன
வேல வந்த வெழில்கண்டெம்
மின்னே ரிடையாள் மால்கொண்டாள்
சால விரங்கி நின்மார்பத்
தாரை யேனுந் தந்தருளே. (77)

அண்ட முற்று மோர்நொடியி
லதிரச் சுற்றி வந்தமயில்
துண்டந் துகளாய்ச் சூர்கிளையைத்
துலைத்துச் சாடி யழித்தமயில்
அண்டர்க் கின்ப மளித்தகந்த
வனத்தா ரைய னமருமயில்
தொண்டர்க் குவகை யூட்டுமயில்
சுவைப்பா மாலை சூடுமயில். (78)

கந்த வனத்தான் றிருவடியைக்
கண்டு நிதமுங் களிக்குமயில்
பந்த மலத்தைப் போக்குமயில்
பரமா னந்தந் தேக்குமயில்
நொந்த வுளத்தார்க் கிரங்குமயில்
நுவலற் கரிய வேகமயில்
அந்த மில்லாத் திறத்துமயில்
அச்சு தன்போ னீலமயில். (79)

வான நகரும் வணங்குகந்த
வனத்து வாழு மெம்பெருமான்
மான வேல்கைக் கொண்டபிரான்
வற்றா வருட்பே ராழியென்றே
ஈன மிகுந்த கடைப்பிறவி
யெடுத்தே முய்தி யடையவளக்
கான விசையின் கருங்குயிலே
கனிந்த குரலிற் கூவுதியே. (80)

ஆறு முகனென் றமிழ்க்குரவ
அருமைப் பாட்டன் றானுமானோன்
ஏறு சீர்ச்சி தம்பரத்தை
இணையில் செந்தூர் பிறவற்றை
வீறு மன்பாற் றெரிசிக்கும்
விருப்பைப் பூர்த்தி செய்திட்டான்
பேறு தருஞ்சீர்க் கந்தவனப்
பெருமா னயில்வேற் கரத்தானே. (81)

அல்வைக் கவிஞன் செல்லையன்
அகட்டில் வந்த கொடும்பிணிக்குக்
கல்லை யுந்தான் குழைக்குமியற்
கந்த வனவின் காரிகைசெய்
தல்ல னீங்கும் பேறுற்றான்
அல்லற் பிறவி வேரறுத்தான்
செல்லா ருந்தண் பசுஞ்சோலை
திகழுங் கந்த வனமுற்றே. (82)

தோட்டஞ் செய்து பிழைத்திடுவான்
சூது வாது தானறியான்
தேட்ட வகைக ளேதுமிலான்
சிந்தை தூயோன் காசியனை
வாட்டு பொல்லா விடந்தீண்ட
மயிலோற் கூவி நீறிட்டு
நாட்ட மிகவே கந்தவனம்
நண்ணிப் பேரின் புற்றனனே. (83)

திக்கஞ் செல்லை யற்குற்ற
தீரா நெடுநாட் பிணியதனை
திக்க ளாவு புகழ்வாய்ந்தோன்
சிவசம் புப்பேர் மாபுலவன்
மிக்க சுவைகொள் பிரபந்த
விதங்க டம்மை யோதுவித்துத்
தக்க வண்ணம் நீக்கிவைத்தான்
தமிழ்த்தே கந்த வனத்தானே. (84)

தேவர் மருந்தும் நாண்மருந்து
சிவனா ரம்மை பேண்மருந்து
பாவ லோர்தம் பாமருந்து
பத்த ரன்பர் சுவைமருந்து
பாவை யிருவ ரின்மருந்து
பவநோய் தன்னைத் தெறுமருந்து
காவ ளத்தின் வளஞ்சிறக்குங்
கந்த வனத்தி லார்மருந்தே. (85)

தொன்மை வாய்ந்த சீர்நவாலிச்
சோம சுந்த ரப்புலவன்
றன்னைப் பிடித்த காசத்தைச்
சற்று மில்லா தழிந்ததவன்
சொன்ன தமிழ்ப்பாத் தொடைசாட்சி
சொல்லு மிதிலோ ரையமில்லை
கன்னல் கசப்பென் றாக்குதமிழ்க்
கந்த வனச்சீர்க் கேதுநிகர். (86)

வாலை யுள்ளக் கருத்தழிந்தாள்
மதிசெந் தழலாய் வதைத்திடுதாம்
பாலை வேப்ப நெய்யென்பாள்
பஞ்சி னணைமுட் படுக்கையென்பாள்
வேலை யொலிநா ராசமென்பாள்
வீசு தென்றல் பேய்க்கனலாம்
சோலை வீதிக் கந்தவனத்
துரைபாற் றூது செல்கிளியே. (87)

பொன்னும் பொருளுந் தருவானைப்
புத்தி புலமை தருவானை
இன்ன லிடுக்கண் டீர்ப்பானை
இணையி லின்பம் புணர்ப்பானை
மன்னு பவத்தை யறுப்பானை
மருவு முயிரின் கருவானை
பன்னு கந்த வனத்தானைப்
பாடி யிறைஞ்சி வணங்குமினே. (88)

முட்டை யென்று பாடினர்க்கும்
முகமா மின்ப வருள்சொரிந்தாய்
மட்டை குப்பை கூழவகை
மக்கிக் கெட்ட மணமெடுக்குங்
குட்டை யன்ன வகத்தேனுங்
கூறு பாட லுனக்குவப்போ
எட்ட மாக விலகுவையோ
இணையில் கந்த வனத்திறையே. (89)

எங்கும் விலகா திருக்கின்றாய்
என்ன கத்து மானாய்நீ
இங்கி ருந்து மிந்தவகம்
ஏனோ புனித மெய்தவில்லை
பொங்கு மிரக்கஞ் சிறிதுமின்றோ
புலையேன் முயல்வும்வேண்டுமென்றோ
கங்கை மைந்தா வளமருவு
கந்த வனம்வாழ் வேலவனே. (90)

உள்ளக் கலக்கஞ் சஞ்சலங்கள்
 உறுத்தும் போதி லன்றிமற்றுன்
வெள்ளக் கருணைக் கமலத்தாள்
 மேவா வுள்ளக் கடையேன்மீ
தெள்ளத் துணையு மிரங்காயோ
 இன்ப விடிவு மெந்நாளோ
மள்ள ரேர்கள் கடவோசை
 மாறாக் கந்த வனத்தானே. (91)

வள்ளி தெய்வ யானையிரு
 மருங்கு மேவ மிளிர்கருணை
வள்ள லென்றே யினியதமிழ்
 வாண ருருகி யுரைத்ததனை
யுள்ள மதனிற் றெளிந்துநனி
 யுன்னை யடைந்தே னேற்றருள்வாய்
கள்ளங் கபட மருவாத
 கந்த வனத்தெம் பெருமானே. (92)

போற்று முடுப்பைச் சிவசம்புப்
 புலவன் கண்ணி னொளிவேண்டிச்
சாற்று மியனான் மணிமாலை
 தகுமின் பதிகங் கீர்த்தனையோ
டேற்ற வூஞ்சல் பராக்கிலாலி
 எச்ச ரீக்கை மங்களமே
போற்பேர் மருவப் புனைந்தவரார்
 புகழ்சேர் கந்த வனத்தாற்கே. (93)

தாயாய் வந்த தயாபரனார்
கந்த மைந்தன் நீயலனோ
தாய்மார் கங்கை சிவகாமி
சாற்று மாறு சுடர்மின்னார்
தாயா ளிதயம் நினக்கதிகம்
தனியே னிற்குச் சேயன்றோ
தாயா ரிருவர் பங்கிலுறு
தகவாய் கந்த வனத்தாயே. (94)

செப்பு முலக மயக்கினிலே
சிக்கி யுள்ளத் தெளிவிழந்தேற்
கொப்பி லுண்மை நிலைகாட்டி
ஒழியாப் பேரின் பத்தழுத்தி
எப்போ தும்நம் பக்கத்தே
இணையில் தாயா யிருந்திடுவான்
இப்பா ரன்றி யெவ்வுலகு
மேத்து கந்த வனத்தானே. (95)

ஆன வண்ட சராசரங்கொண்
டாடு மமிர்த சஞ்சீவி
யான வின்பத் திருப்புகழில்
ஆழ்ந்த புலமை பாண்டித்யந்
தேன தான விசைஞானஞ்
சிறியேற் கென்றும் பொருந்தவருள்
வான நகரு நாண்கந்த
வனத்து வாழும் வேலவனே. (96)

போற்று கந்த புராணத்திற்
பொருந்து பாக்கள் அனைத்திலுமே
யேற்ற வாட்சி புலமைநல
மெளியேற் கென்று மிசையவருள்
சாற்று முன்ற னடிப்பூச்சீர்
தருநூ லனைத்துந் தேறவருள்
மாற்று யர்ந்த பொன்மாட
மருவு கந்த வனக்குகனே. (97)

சிந்தை நிறைந்த வெங்கள்குல
தெய்வ மாக வுற்றதன்றி
முந்து தமிழா லுனைப்பாடு
முறையுந் தவறா தருள்கின்றாய்
அந்த நற்பே றெங்குலத்துக்
கினியு மமைய வருள்வாய்காண்
பந்த மலவே ரற்றழியப்
பண்ணு கந்த வனக்குகனே. (98)

கானக் குயினின் னெழில்பாடக்
கடல்குன் றழித்த திறல்பாட
வானை மீட்ட விறல்பாட
மடவா ரிருவர் சீர்பாட
ஞான வேலின் சயம்பாட
நல்ல குருவாம் நலம்பாட
வானார் கந்த வனமயிலே
மகிழ்ந்து தோகை விரித்தாடே. (99)

அண்ட முகடு கிடுகிடுக்க
அகன்ற வாழி அலைபுரட்ட
அண்ட ருலகாங் கந்தவனத்
தாருந் திறல்சேர் குக்குடமே
திண்டி றற்செஞ் சிறையடித்துச்
செம்பூச் சென்னி தனையுயர்த்திக்
கண்ட வடைப்பற் றறுமுகன்சீர்
கலக்க வுரத்துக் கூவிடுவாய். (100)

தந்தந் தனன தானானா
தாளத் தோடென் னருகிலுற்றுச்
சிந்தை யுவந்தென் தோளேறிச்
சிரசின் மீது பதிந்திருந்து
கந்தன் சிந்தை யக்தளியான்
கந்தன் பந்தத் தடையென்பாய்
கந்த வனத்துப் பொழிலுறையுங்
கடுங்கூர் முட்கா லாயுதமே. (101)

இழகி யருளு மத்தகவா
லெந்தத் தேவு மீடாகாக்
குழக னவனைக் கந்தவனக்
குகனைச் சுடர்வேல் கொண்டானைப்
பழகு தமிழ்ப்பா விருப்பானைப்
பன்னீர் புயத்திண் பொருப்பானை
அழகு மயிலே யழைத்துவூர்
அடியா ரிடர்கள் தொலையவே. (102)

பயந்த நிலைக்குங் கொடுந்துயர்க்கும்
பலியாய்ச் சிறையின் பாற்கிடந்த
சயந்தன் கனவிற் சொரிந்தவருள்
தக்கோர் வெறுக்குங் கடையேற்கு
மியைந்த வொன்றா யுற்றிடுமோ
இனிமை ததும்புஞ் சுவைத்தமிழ்ப்பா
நயந்தங் கின்பக் கந்தவனம்
நண்ணும் வள்ளி நாயகனே. (103)

சிவனா ரம்மை மறையாடத்
திருமால் வேதன் சுரராட
தவரன் படியர் குழாமாட
தமிழ்மின் புலவ ரணியாட
குவடுங் குன்றுங் களித்தாடக்
கோல மயிலே கந்தவன
நவையில் காட்சி யறுமுகனை
நம்முன் கொணர்தி யாடியின்னே. (104)

உள்ளத் துறுதி குலையாம
லுன்றாண் மலரைப் பற்றியின்ப
வெள்ளத் தழுந்தி மகிழ்வதென்றோ
வீண்கா னேனைப் பிறநாட்டம்
தெள்ளத் தெளிவு காணேற்குச்
செப்ப வொண்ணாத் துணைநீயே
அள்ளக் குறையா வருளூற்றே
அழகா கந்த வனத்தானே. (105)

அப்பன் அம்மை குருவும்நீ
அயலோ டுற்ற சுற்றம்நீ
எப்பி றப்பு மீதுண்மை
இவரென் றிருப்போர் கானல்நீர்
ஒப்பி லாத துணையாய்வந்
துறுவ துன்றன் றாளிணையே
வெப்பு நோயைத் தணித்திட்ட
விமலா கந்த வனத்தானே. (106)

காணி பூமி வீடுமனை
காசு தங்கம் பசுதான்யம்
மாணுங் கீர்த்தி யதிகாரம்
மங்கை யேனைப் போகங்கள்
வேணு மென்று விரும்பிலன்யான்
விழைவ துன்றாட் பத்தியொன்றே
சேணு மேத்துங் கந்தவனந்
திகழுங் கருணைச் செவ்வேளே. (107)

நாசஞ் செய்யுங் கோபத்தை
நாசஞ் செய்யு மாற்றலற்றேன்
நேசஞ் செய்து பிறவுயிர்கள்
நெஞ்சி னிறையுந் திறமுமற்றேன்
பாசஞ் செய்யு மயக்கையெலாம்
பாற்றி யுன்றாண் மலரருகில்
வாசஞ் செய்யும் பேறுமென்றோ
மருவுங் கந்த வனத்தானே. (108)

துன்பு செய்யப் பின்னலேனென்
றுயரந் துடைக்க விழைகின்றேன்
அன்பு செய்யு மவாவில்லேன்
அருளை வேண்டி நிற்கின்றேன்
என்பு முருகி யுள்வருந்தேன்
இன்ன லுயிர்கள் படும்போதில்
முன்யான் புரிந்த வினையெதுவோ
முதல்வா கந்த வனத்தானே. (109)

அம்மை யப்பன் றந்தமணி
யண்ட ருலகத் துச்சிமணி
செம்மை யாள ரகத்துமணி
செய்ய தமிழ்ப்பாச் சுவைக்குமணி
எம்மை யிலும்மென் னுளத்துமணி
இருவா ணுதலார் தழுவுமணி
வெம்மை வினைய வாட்டுகந்த
வனத்து மிளிர்வேற் கரமணியே. (110)

அன்ன மிட்டுப் பசிபோக்கு
மாவல் சிறிது மற்றவனாய்
என்ன கருதி நாயேனை
யிந்தப் பிறவி யெடுக்கவைத்தாய்
முன்னஞ் செய்த பாழ்வினையோ
மூண்டிப் படியெற் கானதுவே
அன்னம் வைகுந் தடவாவி
யருகார் கந்த வனத்தானே. (111)

கூழை வாலன் றிணியெருது
கொசுவின் கடியைச் சகிப்பதுபோல்
ஏழை நாயேன் கோபமெனும்
இரும்பன் தாக்கைப் பொறுத்தின்ப
யாழை ரசித்துச் சுவைப்பவனா
யெதற்கு மசையா திருப்பதென்றோ
மாழை மன்று ளாடிதந்த
மைந்தா கந்த வனத்தானே. (112)

என்ன என்ன இதமாக
எடுத்துச் சொல்ல வேண்டியதைச்
சொன்ன போதும் நீமனமே
சொல்லுக் கேட்கின் றாயில்லை
இன்ன லொழியாப் பவநோயை
யில்லா தொழிக்கக் கந்தவனம்
மன்னு முருகன் றாளையென்று
வாழ்த்தி வணங்கப் போகின்றாய். (113)

வேலு மயிலுந் துணையென்று
விருப்போ டென்று முரைக்கவருள்
மேலு மேலு மென்னுளத்து
விரவு மிருளை யடர்க்கவருள்
நாலு மறையு மாலயனு
நண்ணிக் காணாப் பரஞ்சுடராம்
ஆலு மஞ்ஞைக் கந்தவனத்
தைய னாறு முகவேளே. (114)

வற்றாக் கருணைப் பேரூற்றே
    மறையாச் சுகஞ்செய் மென்காற்றே
கற்றா ருளமே வழகுருவே
    கதியற் றாருக் கருட்டருவே
பற்றா ருளத்து நாயாயிப்
    பாரி லுழன்று திரிவேற்கு
மற்றா ரிரங்கி யருள்புரிவார்
    மறைவாழ் கந்த வனத்தானே. (115)

வானஞ் சொரியுங் குளிர்மழைநின்
    மலர்த்தாள் சொரியும் பேரருளில்
நானஞ் செய்து நிதமகிழ்ந்து
    நாயே னென்னை மறப்பதென்றோ
தானஞ் சொரிந்து கரஞ்சிவந்த
    தரும வான்கள் பொன்மனைகள்
கானஞ் சொரியுங் குயிற்பொழில்சூழ்
    கந்த வனம்வாழ் வேலவனே. (116)

பாசப் பிணைப்புற் றழிவேனின்
    பாத விணைய நித்தநித்தம்
வாசப் பிணைப்பின் மலர்கொண்டு
    வாழ்த்தி யிறைஞ்சிப் பூசைசெயேன்
நேசப் பிணைப்பின் னடியாரை
    நினையே னுய்வே னோவருட்ப்ர
காசப் பிணைப்புக் குன்றாத
    கந்த வனம்வாழ் வேலவனே. (117)

என்று முன்ற னிணையடியை
யிதயக் கனிவோ டேத்தவருள்
என்று முன்ற னடிச்சீரை
யினிய தமிழாற் பாடவருள்
என்று முன்ற னடியார்கட்
கியற்று தொண்டின் மூழ்கவருள்
கன்று மனத்தோ ரில்லாத
கந்த வனத்தெம் பரம்பொருளே. (118)

பேசற் கரிய நின்னடிச்சீர்
பேசி மகிழ்ந்து மகிழ்விப்போர்
ஏசற் றிருப்பா ரவர்க்கிணையார்
ஈனப் பிறவி யேனுளத்து
மாசற் றோனா யவர்தங்கள்
மத்தி யிருக்க வருள்முத்தி
வாசற் படியாங் கந்தவனம்
வாழுங் கருணை வேலவனே. (119)

பிள்ளைத் தமிழ்சொல் பகழிக்குப்
பெரிய முத்து மாலைதந்து
கொள்ளைக் கார னெனும்பெயருங்
கூட வைத்தோ னீயலனோ
வெள்ளை யுளத்தாற் செய்திட்ட
மிகுசீர்த் தொடைக்குப் பரிசீதோ
கள்ளைச் சொரியு மலர்க்காச்சூழ்
கந்த வனத்துப் பாவலனே. (120)

மெய்வி திர்த்துப் புளகிக்க
விழிக ளாறாய் நீர்சொரியச்
செய்ய கரங்கள் சிரமேறச்
சிந்தை புலன்க ளொடுக்கமுறத்
தெய்வ வுணர்வால் நாக்குழறத்
தீசேர் மெழுகா யுள்ளுருக
வைய மெல்லாம் போற்றுகந்த
வனத்திற் றொழுது நிற்பதென்றே.(121)

வெஞ்சு ரத்தில் முட்டையென
வெண்பா வுரைத்த வவனுமுன்பொற்
செஞ்ச ரணத்தின் சீர்பாடுஞ்
செப்ப வொண்ணா வின்பளித்தாய்
வெஞ்ச மர்க்கண் ணெதிர்த்தாற்கும்
மேலாம் பேறு நல்கினையென்
னெஞ்ச மார்வாய் கந்தவனம்
நேயத் துறையும் வேலவனே. (122)

குன்றைக் குன்றக் குகைதனிலே
குடியி ருந்த பூதத்தைக்
கொன்று கீர ரோடவர்தங்
குழுவைக் காத்தோன் கடையவனுள்
ளொன்று மிருளை யோட்டியரு
ளொளியை யூட்டிக் காத்தருளும்
குன்று தோறு மாடிமகிழ்
குமரன் கந்த வனத்தானே. (123)

கந்த புராண விளக்கமெனுங்
கரும்புந் துவர்க்கச் செயுநூலைத்
தந்த சைவப் பெரியாராஞ்
சான்றோர் மணியைச் சிவபாத
சுந்த ரப்பேர்க் குருமணியைத்
தன்சீர்த் தளியி னருகிருத்திக்
கந்த வனத்தான் மகிழ்ந்தவதைக்
கணிக்க வல்லா ரிங்கெவரே. (124)

சைவக் குரவர் நால்வருக்குஞ்
சைவப் பெரியா ரிவர்க்கொண்டு
துய்ய கோவி லெடுப்பித்துத்
தொன்மைச் சைவ நீதியிந்த
வைய கத்தை யுய்திபெற
வைத்த வாழி யருளாளன்
சைய மெல்லா மாடிமகிழ்
தமிழ்ச்சேய் கந்த வனத்தானே. (125)

ஞான வடிவேற் கரத்துவள்ளல்
நளின மலர்த்தா ளகத்திருத்தி
ஈன மிகுந்த விப்பிறவி
யெடுத்து ழன்று நிதமலைவேன்
மோன வின்ப நிலைமூழ்கி
முடிவி லின்பந் துய்ப்பதற்குத்
தான மோங்கு கந்தவனத்
தலம்போல் வேறொன்றிலையிலையே. (126)

நீல மயில்கள் மகிழ்ந்தகவி
நீண்ட தோகை விரித்தாடச்
சால மகிழ்ந்து கருங்குயில்கள்
சலிப்பற் றிசைத்தேன் றனைச்சொரியுங்
கோல மலர்க்காக் குமாரபுரம்
விட்டுக் கந்த வனமேவ
மூல கார ணந்தானாய்
மூண்ட தேதோ வேற்கரனே. (127)

வன்னிப் பொறிக ளோராறு
மருவிச் சேர்ந்த துன்மேனி
வன்னி வெம்மை மிகுந்தவந்த
வன்னி யிருப்பைத் தாங்கவொண்ணாத்
தன்மை யாலோ வினியசுவைத்
தமிழ்ப்பா நிதமும் மாந்துதற்கோ
தொன்மை மிகுந்த கந்தவனந்
துடிப்பா ருளத்து மேவினையே. (128)

வச்ர யாக்கைச் சூரனையும்
மருவு மவன்றன் கிளையினையும்
எச்ச மறவே யீறுசெய்த
இணையில் சுடர்வேல் பிடித்தவுனக்
கச்ச மற்ற மிலேச்சர்க
ளான போர்த்துக் கீசரவர்க்
கச்ச முற்றோ கந்தவன
மணைந்தாய் சேவற் றுவசத்தாய். (129)

உன்றண் ணருளாற் றானேநா
னுன்னைப் பாட முடியுமன்றி
என்னா லாவ தெவ்விடத்து
மேது மில்லை யாதலினால்
உன்னைப் பாடு மார்வமாற்றல்
உள்ள மெல்லாம் நிறையத்தா
தென்னம் பொழில்சூழ் கந்தவனத்
தேவ தேவா முருகோனே. (130)

பாட்டும் பாட்டி னுட்பொருளும்
பாடு வோனும் பாவன்மை
யூட்டு வோனு பாவதிலே
யொன்று சுவையும் பாத்திறனைக்
காட்டு வோனுங் கருதில்நீ
கடையே னென்னா லேதுமில்லை
வேட்டு வர்தங் குலங்கலந்த
வீரா கந்த வனத்தானே. (131)

பெருகார் வத்தாற் கந்தவனப்
பெருமான் சந்நி தானமுற்று
முருகா வெனவோர் தரமகந்தை
முனைப்பில் லாமற் சொல்லிநனி
யுருகாய் நெஞ்சே யைம்புலனு
மொடுங்கிக் குவிய விறைஞ்சிநில்லாய்
கருகா நிற்குங் கொடியவினைக்
காட்டை யழித்துய் வார்வதென்றே.(132)

பச்சை மயிலின் மீதுவரு
பரமன் கமலத் தாளிணையை
வச்சி ரத்திண் ணுடற்சூரன்
மார்பைப் பிழந்த வடிவேலை
இச்சை கோபங் காமமவா
விடைப்பட் டழிவீர் கந்தவன
மெஞ்சந் தர்ப்பத் தாகிலுஞ்சென்
றேத்திப் பணிந்து வணங்குமினே. (133)

பிஞ்சு மதியு மிருட்கரியும்
பெயரு மலையு மின்னிசையும்
பஞ்சி னணையுஞ் சுவைப்பாலும்
பகர்பூ மணமு மென்காலும்
வஞ்சி யாளை வஞ்சித்து
வாட்டு நிலையை யஞ்சுகமே
மஞ்சின் பொழில்சூழ் கந்தவன
வாசற் கியம்பி வாவெடுத்தே. (134)

தூது விட்ட அஞ்சுகந்தான்
சோலைக் கனிகண் ணுற்றதுவோ
ஓது தனது சோடியைக்கண்
டூடிக் கூடி முயங்கிடுதோ
காது பருந்தைக் கண்டுள்ளங்
கலங்கி மறைவி லொளித்ததுவோ
தூது கந்த வனத்தாற்குச்
சொல்ல நேர மிவ்வளவேன். (135)

தேடி னார்தம் முன்னிற்பான்
சிந்திப் பார்க ளுள்ளிருப்பான்
பாடி நிற்பா ரருகிருப்பான்
பணிவார் தம்பாற் பரிந்துநிற்பான்
ஆடி நின்றா லாடிநிற்பான்
அபய மென்றா லணைத்துநிற்பான்
மாடி மனைகள் சூழ்கந்த
வனத்தில் வாழும் வேலவனே. (136)

விண்மீன் பூக்க வருவாரோ
வெதுப்ப மதியம் வருவாரோ
தண்கா மலர வருவாரோ
தகிக்க விருளும் வருவாரோ
பெண்ணான் பேதை படுமவஸ்தை
பெரிது முணரா துள்ளாரே
கண்ணன் மருக னாமுருகன்
கந்த வனத்தெங் காதலரே. (137)

இன்னுங் கந்த வனத்துரையுற்
றென்பால் வாராக் காரணமென்
வன்னத் தோகை மயில்தூக்கி
வரவுள் ளிசைவு காட்டிலதோ
கன்னி மார்க ளோரிருவர்
கதவைச் சாத்திப் பூட்டினரோ
அன்பர் கூட்டம் வழித்தடையோ
அபலை மீதுள் ளிரங்கிலனோ. (138)

முழுவிந் தனைய முகமாறும்
    முந்நான் கான மலர்விழியும்
எழுசீர் வேலும் பிறபடையும்
    இலங்கு கரங்க ளீராறும்
செழுமா மலர்மென் றாளிரண்டுஞ்
    சிறியேன் கனவி லும்வரச்செய்
மழுமா னேந்தி சுதாகந்த
    வனம்வாழ் பச்சை மயிலோனே. (139)

மின்னா ரிருவர் மோகத்தான்
    விரிபா நலந்தேர் தாகத்தான்
பொன்னார் வனசத் தாளுடையான்
    பொருதிண் குன்றத் தோளுடையான்
ஒன்னார் தமைக்கொல் வேலுடையான்
    உணரா தலைநா னூலுடையான்
அன்ப ரவர்தந் தவனத்தான்
    அணிசீர் கொளுங்கந் தவனத்தான்.(140)

கன்னற் சிலையான் மதனத்தான்
    கமல வாறு வதனத்தான்
மன்னு புனிதச் சரவணத்தான்
    மருமெல் லனிச்ச வுரவணத்தான்
பன்னு முட்டாள் வாரணத்தான்
    பசுமால் மீட்ட வாரணத்தான்
கன்னல் வயற்கந் தவனத்தான்
    கவின்கா மலர்க்கந் தவனத்தான். (141)

மருமால் கொண்ட வண்டினங்கள்
வைகுங் கந்த வனக்குமரன்
திருமால் மருகன் றிருவடியைச்
செய்ய தமிழாற் பாடுமொப்பில்
பெருமால் கொண்டு பிறிதெண்ணாப்
பெட்பி னுச்சி நிற்போரைக்
கருமால் பற்றி யேதுசெயுங்
கருகு மாலாய்ப் போமதுவே. (142)

வள்ளி தழுவு காதலருள்
வள்ள லென்றே யாப்தரெலாம்
தெள்ளி தாகக் கண்டவுண்மை
சிறியேன் பாற்பொய் யாகுவதோ
தள்ளி டாம னின்கமலத்
தாளி ணைக்கா ளாக்கிடுவாய்
புள்ளி மயிலின் மீதுவரு
புலவா கந்த வனத்தானே. (143)

கல்லோ விரும்போ நின்னியதம்
கரையு மிவையு மோர்காலம்
கல்லா மென்றன் புன்னுளத்துங்
கலந்த தாற்கல் லானதுவோ
எல்லாம் வல்ல பெருமானே
யென்பா லிரங்கி யருள்வாயே
நல்லா ரிருவ ரருகிருக்கும்
நலமார் கந்த வனத்தானே. (144)

அவத்திற் காலம் போக்காமல்
அழிவிற் பிறரைச் செலுத்தாமல்
சிவத்தி லுள்ளஞ் செலுத்தவைத்தாய்
சிவமும் நீயு மொன்றன்றோ
தவத்த னாகும் பேறெற்குந்
தந்தாய் கைதா னெகிழவிடேல்
சிவத்தின் மைந்தா கந்தவனச்
செல்வா வேற்கை யிறையவனே. (145)

சடத்தைப் பாடி நித்தநித்தம்
சலன புத்தி கொண்டுடலாம்
குடத்தை யவமே போட்டுடைக்குங்
கூழ னேற்கு மேற்றதுவா
மிடத்தை நல்கி யுய்யவைப்பாய்
இரங்கி யருளப் பிறரிங்கார்
திடத்த பத்தித் தொண்டருறை
சீரார் கந்த வனத்தானே. (146)

துள்ளித் திரிந்த காலத்தென்
துடுக்கை யடக்கி நடக்கவில்லை
அள்ளித் தருமங் கொடுக்கவில்லை
அன்பாற் பிறரை யணைக்கவில்லை
எள்ளிக் கடையே னென்றெவரு
மிகக்கு மிவற்கு முய்வுண்டோ
புள்ளிக் கலப மயிலூரும்
புலவா கந்த வனத்தானே. (147)

பற்ற றுத்த ஞானியைப்போற்
பாட்டுப் பாடி நிற்கின்றேன்
உற்ற சுற்ற மென்றவந்த
வுணர்வு சிறிதும் நீங்கவில்லை
குற்ற மிதனைப் பொறுத்தருள்வாய்
குறிக்கோ ளுய்வைக் கொளச்செய்வாய்
நற்ற மிழ்த்தென் கந்தவன
நாதா மயூர வாகனனே. (148)

கிள்ளி யேனு மிரக்கத்தாற்
கேட்டோர்க் கேதுங் கொடுத்தறியேன்
தெள்ளி யெடுத்த தவிடதையுந்
தீனர் பசிக்குக் கொடுத்தறியேன்
கள்ளிப் பாலு மருந்தாருங்
கடையே னெதற்கு மாகிலனே
கொள்ளிக் கிரையாய் மட்டுமுளேன்
குளிர்காக் கந்த வனத்தானே. (149)

சீவர்க் காற்று மெத்தொண்டுஞ்
சிவனுக் காற்று மத்தொண்டா
யாவ லாகச் செய்தறியேன்
அவ்வா றாற்றி மகிழ்பவரைத்
தேவ ராக மதித்தறியேன்
சிந்தை செம்மை யுறுவதென்றோ
பாவ ளஞ்சேர் கந்தவனம்
படர்வேற் கரத்து வானவனே. (150)

தெய்வப் பணிகள் செய்தறியேன்
தெய்வப் பணிகள் செய்பவரைத்
தெய்வ மாக நினைந் தறியேன்
சிந்தை யுவப்பா லவர் பணியில்
மெய்வ ருத்தி மகிழ்ந்தறியேன்
வீணாய்க் காலங் கழிந்ததுவே
வெய்ய பிறவிப் பிணியதனை
வீட்டு கந்த வனத்தானே. (151)

ஆறு முகமு மாறிரட்டி
யான குவடுத் தடந்தோளும்
பேறு சொரியு மலர்த்தாளும்
பெண்ணா ரிருவ ரொளிர்மருங்கும்
நாறு மனிச்சந் தொடைமார்பும்
ஞான வேலு மெனதுளத்தார்
பேறு தருவாய் கந்தவனப்
பெருமா னுள்ளக் கனிவுடனே. (152)

உள்ளக் கனிவு முரைக்கனிவு
மோச்சு செயலி லுலாங்கனிவும்
வெள்ளக் குளிர்ச்சி விழிக்கனிவும்
விரவு நடையில் மிளிர்கனிவும்
கள்ளக் குரம்பை தனைச்சுமக்குங்
கடையே னிவன்பா லமைவதென்றோ
பள்ளக் கழனிக் கந்தவனம்
படரும் வேற்கை யிறையவனே. (153)

ஆடற் பெருமா னுதற்செல்வம்
அம்மை மடிசேர் மதிக்கொழுந்து
பாடற் சுவைதேர் பாவரசு
பாவை யிருவோ ருளச்சோதி
தேடற் கரிய சுவையமிழ்தம்
திரண்ட வழகும் நாணழகு
நாடற் கரிய மணிவிளக்கு
நவிலுங் கந்த வனமுருகே. (154)

ஊனா ரிந்தக் குடிலகத்தி
னுள்ளே யிருக்க வெனைவிடுத்தாய்
நானார் தனுவே முதனான்கும்
நவில்பா சத்தோ டெனையாளுங்
கோனா ரியல்பு முணர்ந்துற்ற
குறிக்கோள் தனையு முணர்ந்துயச்செய்
தேனா ரெழிற்காக் கந்தவனத்
தேவா செல்வத் திரவியமே. (155)

காவுண் டெவர்க்கும் நிழனல்கும்
கனியுண் டுயிரின் பசிபோக்கும்
பூவுண் டுன்றாள் தொழவுதவும்
பொன்னுண் டிடைஞ்சல் தனைப்போக்கும்
ஆவுண் டரனார்க் கஞ்சுதவும்
அறிவுண் டகத்தி லொளியேற்றும்
நாவுண் டுன்றா ளிணைபாடேன்
நவில்சீர்க கந்த வனத்தானே. (156)

கற்றுப் பெற்ற மாணறிவுங்
கடையேற் கியல்பா யமைதிறலுஞ்
சற்றும் புலனை யடக்கவொன்றிச்
சார்பா சத்தை யடர்க்கவலி
யற்ற துன்ற னடியிணைக
ளன்றி மற்றொள் றெங்குமிலை
நற்ற வர்வாழ் கந்தவன
நாதா வென்னை யாண்டருளே. (157)

ஆக்கு வோனீ யழிப்போனீ
யடியார் தங்க ளகவிருளைப்
போக்கு வோனீ புத்தொளியைப்
புகுத்து வோனீ வீடுபெற
நோக்கு வோனீ நுண்ணியர்க்கும்
நுண்ணி யன்றா னானவனீ
வாக்கு வன்மை நல்குகந்த
வனம்வாழ் கருணா கரத்தேவே. (158)

நின்னைப் பாடி யலுத்ததன்றி
நின்னெஞ் சத்தை யுருக்கிலனென்
வன்மைக் குறைவோ செந்தமிழில்
வாய்த்த வாட்சிக் குறைவதுவோ
முன்னை வினையின் பயன்றானோ
முயற்சிப் பற்றாக் குறையதுவோ
மின்னைப் பொருவு மிடையிருவர்
விலகாக் கந்த வனத்தானே. (159)

ஓடி யோடிப் பணங்குவித்தேன்
ஒப்பில் மாடந் தனையமைத்தேன்
ஊடி யூடிப் புரண்டணைந்தேன்
உயிர்மக் கள்தா னென்றுன்னை
நாடித் தேடித் தொழுதலற்றேன்
நமனார் வருநா ளேது செய்வேன்
பாடி யாடித் துதித்தன்பர்
பரவு கந்த வனத்தானே. (160)

சாலை யோரம் மரம்நாட்டேன்
தக்க வூர்தித் தரிப்பனாதர்
சாலை யமையேன் கேணிசுமை
தாங்கி கட்டப் பிணியாளர்
சாலை யிவைகட் குதவாத
சடமா யெனையேன் படைத்துவிட்டாய்
வேலை யருகார் கந்தவன
வேலா விதுவு மென்விதியோ. (161)

வாச மலர்க ணிதமெடுத்து
மாலை கட்டி நின்னடிக்கு
நேச மிகவே பூசைசெய்து
நெஞ்ச முருகித் தமைமறக்குந்
தாச ரவர்க்குத் தொண்டுசெயுந்
தகவை யெற்குந் தந்தருள்வாய்
தேச தொழியாக் கந்தவனச்
சினக ரம்வாழ் வேலவனே. (162)

தந்த னந்தா தந்தனந்தா
தாளத் தோடே யன்பரிசை
வந்த னந்தா லுதிர்க்கவிழி
மார்பை நனைக்கக் கூத்தாடி
யிந்த னந்தா னிறுதியென்னும்
ஈனந் தன்னைத் தவிர்த்திடுவார்
சந்த னந்தா னுஞ்செழுமை
தாங்குங் கந்த வனத்தலத்தே. (163)

தலத்திற் சிறந்த கந்தவனத்
தலத்திற் பாடு வோர்தொண்டர்
குலத்திற் பெரியோர் பிறவிதொறுங்
குறியா யிருந்து செய்ததபோ
பலத்திற் கெடுத்துக் காட்டுவலி
பாறா தென்று மயக்கிநிற்கும்
மலத்திற் கழிவு தனைக்காட்டும்
வலிமை குன்றாச் சைனியமே. (164)

ஊனா ருயிரா ரியல்காட்டி
யுயிருக் குயிருன் னியல்காட்டித்
தேனா ருரையா ரியல்காட்டித்
திகழ்பொன் மண்ணி னியல்காட்டி
நானா டுண்மை நெறிகாட்டி
நவிபே ரின்பத் துய்த்தருள்வாய்
வானா ருருகிப் பணிகந்த
வனத்தில் வாழும் வேலவனே. (165)

பாடி யுன்னைப் பெற்றபலன்
பகைவ ராலே குட்டுண்டு
வாடி யுள்ள மிகச்சாம்பி
மானஞ் சூடு சொரணையற்ற
பேடி யாகக் கிடந்தொதுங்கிப்
பெண்டில் பிள்ளை நகைக்கிடமாய்க்
கோடி யொருபா லுறுநிலையோ
கொடைவாழ் கந்த வனத்தானே. (166)

கொழும்பு நோக்கிப் பறந்துவந்தேன்
கோவில் புகுமா சாரமில்லை
தொழும்பே ராவ லுறிற்புறத்தே
சுற்றி வந்து தொழுநிலைமை
எழும்பொல் லாப்போ டகத்துன்ப
மெல்லாம் பொறுக்க முடியவில்லை
தொழும்பே றதுவும் போனதுவோ
துய்ய கந்த வனத்தானே. (167)

ஒப்பில் சைவஞ் செழித்தோங்க
உலவா தெங்கும் வளந்தேங்க
கைப்பில் தமிழ்க்கா ரிடர்நீங்க
கபடம் வஞ்சங் கழிந்தேங்க
செப்பு தமிழர் செயந்தாங்க
தீமை கொடுமை யடிவாங்க
மப்பு குளிர்ச்சி மருவுகந்த
வனத்தா யாடீர் மலரூஞ்சல். (168)

சிறைவண் டனிச்சந் தாராட
திகழ்முப் புரிநூல் வேலாட
கறையில் பைம்பொற் றுகிலாட
கரத்தா ரேனைப் படையாட
நறைமென் பூந்தாட் கழலாட
நண்ணு தொண்டர் குழாமாட
மறைவாழ் சீர்த்தி மருவுகந்த
வனத்தா யாடீர் மலரூஞ்சல். (169)

அம்மை சிவனா ரருண்முத்தே
அடியார் தொண்ட ரகமுத்தே
எம்மை யிலுமெற் கருள்முத்தே
இருவர் மடவார் சுகமுத்தே
செம்மை நெறியார் துணைமுத்தே
செய்ய தமிழ்த்தா யுயிர்முத்தே
மும்மை யிலுமார் கந்தவன
முத்தே முத்தந் தருகவே. (170)

கற்றார் சுவைக்குஞ் செழுங்கனியே
கரையில் லாத வருட்கடலே
பற்றார்க் குய்வு தருமமிழ்தே
பாவா ணர்க்கின் றமிழ்த்தருவே
முற்றா மதியாற் கொருகுருவே
மூலா தார மாம்பொருளே
வற்றா வருள்சேர் கந்தவன
வாழ்வே முத்தந் தருகவே. (171)

ஆதி யந்த மிலாச்சுடரே
அரும றைக்கு மரும்பொருளே
நீதி யதுவா மொருநிறைவே
நீல மயிலூர் திருமுருகே
ஏதி லார்கட் காங்கதியே
எல்லை யில்லா வருணிதியே
சாதி மலர்க்காக் கந்தவனத்
தமிழ்த்தே முத்தந் தருகவே. (172)

குழலுந் துவர்க்க அழுகுழந்தாய்
குயிலும் நாண அழுகுழந்தாய்
பழகு தமிழ்க்கா யழுகுழந்தாய்
பரமேஸ் வரிபாற் கழுகுழந்தாய்
பழமொன் றுளதென் றழுகுழந்தாய்
பயத்தா யறுவர்க் கழுகுழந்தாய்
மழலை குறையாக் கந்தவன
மதலாய் தாலோ தாலேலோ. (173)

அடியார் நலுத்துக் கழுமதலாய்
அணிநீ றிலங்க வழுமதலாய்
கடியார் குராவுக் கழுமதலாய்
கவியின் றொடைகட் கழுமதலாய்
வடிவே லதனுக் கழுமதலாய்
மயில்வா கனத்துக் கழுமதலாய்
மடியார் தலிலாக் கந்தவன
மதலாய் தாலோ தாலேலோ. (174)

திங்கட் கோடு மலாவுமெழிற்
றிங்கட் கோடே யிளமுருகே
செங்கட் கருமால் திரவியமே
செவ்வா னிறத்தி லொளிர்மணியே
யெங்கட் குயிரா யிலங்குயிரே
இந்தக் கலிக்கா மிகன்முதலே
வங்கக் கடலார் கந்தவன
மதலாய் தாலோ தாலேலோ. (175)

பரமேஸ் வரிதாய் மாரறுவர்
பால்தந் திட்டார் குறைவயிறோ
பிரமா புரத்து நிகழ்வெண்ணிப்
பெரிதும் பாலை யருந்திலையோ
உரமே வுரச்சூ ரவனையடு
முணர்ச்சிப் பெருக்கால் மிகுபசியோ
வரமே தருசீர்க் கந்தவன
மதலாய் தாலோ தாலேலோ. (176)

அருகார் மஞ்ஞை தோகைவிரித்
தாடிக் காட்ட வில்லையென்றோ
வருகார் முகிலு மழைத்துளியை
வாய்ப்பாய் விசிற வில்லையென்றோ
குருகாந் துவசச் சேவலது
கூவ விலையோ வழுதிளையேல்
கருகா வளக்காக் கந்தவனக்
கடம்பா தாலோ தாலேலோ. (177)

மலர்வண் டினங்கள் பாடிலவோ
மருநீ பத்தின் நிழல்குறைவோ
அலல்மென் புனலார் சரவணத்தும்
அலுப்புத் தட்டி விட்டதுவோ
புலர்மின் காலை யிளம்பரிதி
போலத் தோன்ற விரும்பிலையோ
உலர்வன் காலில் கந்தவனம்
உடையாய் தாலோ தாலேலோ. (178)

அன்னை மடியிற் கிடத்திலளோ
அப்ப னுரத்திற் பொருத்திலனோ
முன்னோன் வந்து தூக்கிலனோ
முகுந்தன் நகைகள் போட்டிலனோ
உன்னான் முராரி தொழுதிலனோ
உரத்து விம்மி யழுவதென்ன
அன்ன வயல்சூழ் கந்தவனத்
தமிழ்தே தாலோ தாலேலோ. (179)

வானை வானத் தாரகையை
மதியை யெல்லைக் கோள்வகையை
யேனை மரம்பூ காய்கனியை
எழிற்குன் றாற்றை மலர்த்தடத்தை
மானை மயிலைப் பார்த்தலுப்பு
வந்த தாலோ வழுகின்றாய்
தேனைச் சொரிகாக் கந்தவனச்
செல்வா தாலோ தாலேலோ. (180)

எல்லாம் வல்ல பெருமானீ
எல்லா மறியும் பெருமானீ
எல்லா மான பெருமானீ
யெங்கு மான பெருமானீ
சொல்லார் தூக்க விழிப்புநிலை
தொடர்வ துண்டோ நின்றனையும்
கல்லா ரில்லாக் கந்தவனக்
கடம்பா தாலோ தாலேலோ. (181)

மடித்த லத்துக் குழந்தையாய்
மழலை பொழியும் பாலகனாய்
கடித்தா ரணிச்ச முருகோனாய்க்
காம னாணுங் குமரோனாய்த்
தடிக்கை யாளன் முதியோனாய்த்
தண்டேன் றினைமா விக்கினனாய்
நடித்தா டல்செய் கந்தவன
நாதன் றாளைத் துதிநெஞ்சே. (182)

மன்னு புவனத் துள்ளாயோ
மலர்க்கோ விற்கண் ணுள்ளாயோ
பன்னு மறையி லுள்ளாயோ
பைந்த மிழ்க்கண் ணுள்ளாயோ
அன்ப ரகத்தி லுள்ளாயோ
ஆடுங் குன்றி லுள்ளாயோ
உன்னுள் ளிருவர் தம்முளத்தோ
உள்ளாய் கந்த வனத்தானே. (183)

என்ற னுள்ளத் துள்ளாயோ
இனிய மலர்க்கண் ணுள்ளாயோ
இன்னி சைக்கண் ணுள்ளாயோ
எழிலார் மயின்மீ துள்ளாயோ
மின்னல் தன்னி லுள்ளாயோ
வீழும் மழையி லுள்ளாயோ
கன்னல் தன்னி லுள்ளாயோ
கந்த வனத்தெம் பெருமானே. (184)

தேடத் தேட ஒளிக்கின்றாய்
திரும்பத் திரும்ப இழுக்கின்றாய்
பாடப் பாட அருள்கின்றாய்
பார்க்கப் பார்க்க மறைகின்றாய்
ஓட ஓடத் தொடர்கின்றாய்
உடனே திரும்ப விலகுகின்றாய்
மாட கூடக் கந்தவன
மதலா யென்ன மாயமிதே. (185)

பத்த னல்லேன் யானெனினும்
பத்தன் போலப் பாடுகின்றேன்
சித்த மலமோ வழியவில்லைச்
சிந்தை நிலையில் நிற்கவில்லை
வித்தை காட்டி நிற்கின்றாய்
வேடம் போட்டு நிற்கின்றாய்
அத்தா வென்னை யாட்கொள்வாய்
அயிலாய் கந்த வனத்தானே. (186)

அருண கிரியார் திருப்புகழாம்
அமிழ்தைச் சுவைத்த நினக்குமல
விருணல் கிதயக் கடைநாயே
னியற்று பாடல் சுவைத்திடுமோ
தருண மிதிலே மற்றிதனைத்
தள்ளி விடாம லேற்றருள்வாய்
பொருணல் கிச்செந் தமிழ்வாணர்ப்
போற்று கந்த வனத்தானே. (187)

நாயே மெங்கள் பரம்பரைநின்
நளினத் தாள்கட் கியையடிமை
பேயாய்த் திரிந்திங் கெய்த்தாலும்
பிரியா தெம்மை யாட்கொள்வாய்
ஓயா தின்பத் தமிழ்மாலை
யுன்றாட் கியம்பு பணியையருள்
தேயா திதனைக் காத்தருள்வாய்
சீர்சேர் கந்த வனத்தானே. (188)

எங்கள் குடும்பத் துதித்திட்டோ
ரெவரு மின்று தமிழ்கற்று
மங்க லில்லாச் செழும்புலமை
வாய்க்கப் பெற்ற நிலையிலில்லை
எங்ங னிந்த வேண்டுதலு
மெளிதாய் நிறைவு பெற்றமையுந்
தங்க மனைசூழ் கந்தவனஞ்
சாரு மயில்வேன் முருகையா. (189)

எல்லாம் வல்ல பெருமானிற்
கியலா தென்றிங் கொன்றுமில்லை
சொல்லார் தமிழி லிரும்புலமை
தொடர்ந்தெங் குடும்ப மெய்தவருள்
வல்லா யுன்றன் மலரடிக்கு
வாடா மாலை யதுசாத்தி
எல்லா நலமும் பெறவருள்வாய்
இணையில் கந்த வனத்தானே. (190)

யாப்பு மணியு மிலக்கணமும்
இனிய வகமும் பொருளுமிறப்
ஏப்பை யாகிப் போயினதால்
எங்கள் மரபுக் கவிகட்டுக்
கோப்பை மீண்டு யென்றெய்தும்
கொதிநீர் கணக்கில் லாதுவிட்டு
மாப்பி சைந்த வணமாச்சே
மலிசீர்க் கந்த வனத்தானே. (191)

சாரும் பிறவி யனைத்திலுமே
சைவ னாகப் பிறக்கவருள்
பேரு மினிமை நறியதமிழ்
பேசு வோனாப் பிறக்கவருள்
ஆரு மன்பா னின்றாளி
னருள்மெய்ச் சீரைப் பாடவருள்
ஏரு லாஞ்சீர்க் கந்தவனத்
திருக்கு மெங்கள் முருகையா. (192)

எண்ணில் பிறவி யெடுத்திளைத்தேன்
இன்னு மின்னு மெத்தனையோ
எண்ணில் பிறவி யனைத்திலுமே
யென்ன வென்ன செய்தேனோ
பண்ணு துன்பப் பவநோயைப்
பாற்றி யின்ப வீடளிப்பாய்
கண்ண னேத்துந் திருமருகா
கந்த வனம்வா ழருண்முருகா. (193)

கிளர்நல் லம்ச மனைத்துமுற்ற
கிருபா னந்த வாரியைப்போ
லுளநற் பிறபி யடுத்தடுத்தே
யுறினு முள்ள காலமெல்லாந்
உளமே வுவகை யுடனேற்றே
யுன்றாட் கடிமை யாகவருள்
களவு கரவில் கந்தவனக்
கதிர்வே லுடைய வானவனே. (194)

ஏடு தொடக்கி யெழுத்தாணி
ஏந்த வைத்தா னின்றலத்தில்
பீடு மிகுந்த வாறுமுகப்
பேரா ராசா னென்பாட்டன்
நீடு மென்ற னுளத்திலது
நிகரில் லின்ப நிகழ்ச்சியதே
பாடு புகழ்சேர் கந்தவனப்
பரமா வாறு முகத்தரசே. (195)

ஆறு முகனின் றிருமுன்னர்
ஆறு முகப்பே ருள்ளகுரு
வீறு மிகுந்த கருணையினால்
வித்யா ரம்பஞ் செய்துவைக்க
ஏறு பத்தி யாலுன்ற
னிணைத்தாட் சீரைப் பாடலுற்றேன்
வீறு சைவ மரபேறு
மேன்மைக் கந்த வனத்தானே. (196)

எழுத்துச் சொல்லுப் பொருளிவற்றில்
யாப்பி லணியிற் பிறவற்றிற்
பழுத்த வாட்சி பாண்டித்யம்
படைக்கப் பெறாதேன் சொல்லுமிந்த
உழுத்த கவிதை யிவற்றைநீ
யுவந்திங் கேற்றுக் கொள்ளுவையோ
கொழுத்த சுவைப்பாக் கந்தவனங்
குலவு வேற்கை யிறையவனே. (197)

பத்த னைப்போற் பாடுகின்றேன்
பத்தி யுள்ளத் துள்ளதுவோ
பித்த னேற்குத் தெரியவில்லை
பிழைகள் பொறுத்தே யிவ்வுளத்தைச்
சுத்த மாக்கி மெய்ப்பத்தி
தோற்றச் செய்து நிலைக்கவைப்பாய்
சித்த ருலவுங் கந்தவனச்
செல்வா வேற்கை யிறையவனே. (198)

மனத்தைத் தூய்மை யாக்குவது
    மடவேற் குரிய தனிமுயற்சி
கனத்த முயற்சி யிதிலிடறு
    கட்டையுறாமற் காத்தருள்வாய்
அனத்த னமைத்த வமைப்பதையு
    அழிக்கு மாற்றல் நினக்குண்டு
புனத்த லைந்த கந்தவனப்
    புலவா சுடர்வேற் கரத்தரசே. (199)

உரித்து வாழைப் பழந்தன்னை
    யுனக்குந் தீற்ற வோவென்பாய்
வரித்த பொருள்தான் பாடுபட்டால்
    வந்து சேர்வ துண்மையுண்மை
தரித்து நீடு நிலைக்குமது
    தடைவா ராமற் காத்தருள்வாய்
திரித்த தினையுஞ் செழுந்தேனுந்
    தேடுங் கந்த வனத்தானே. (200)

கந்த வனத்தா யுன்றனருட்
    கருணை யதுதா னமைந்தக்கால்
எந்த விருப்பும் நேரத்தோ
    டெளிதி னிசமாய் நிறைவேறும்
வந்த னைக்குந் தமிழ்க்கவிக்கு
    மகிழ்ச்சி யுற்றே யருள்சொரியுஞ்
சுந்த ரன்றா னீயென்று
    தொழுது நிற்பர் புலவரெலாம். (201)

குன்றி லாடி மகிழ்குமரன்
கோல மயிலில் வருகுமரன்
ஒன்று சுவைப்பாத் தொடைக்குமரன்
ஓல வொலிபால் விரைகுமரன்
வென்று வாகை புனைகுமரன்
மின்னா ரிருவ ரிடைக்குமரன்
என்று மிளமை திகழ்குமரன்
இணையில் கந்த வனக்குமரன். (202)

பாட வுன்னை யுளத்தாசை
பரவை யலைபோற் பெருகிடுதே
நாட என்னைக் கருத்துவளம்
நவிலின் பொருளும் மறுத்திடுதே
வாட லற்ற இதச்சொல்லும்
வளக்கற் பனையும் ஒளித்திடுதே
ஆட லரசன் றருபுதல்வா
அழகார் கந்த வனமுருகா. (203)

உன்னைப் பாட வேணுமென்றா
உன்ற னருள்தான் வேண்டுமெற்கு
பன்னு சொல்லுந் தொடைவகையும்
பகரும் பொருள்கற் பனையணியும்
முன்வந் தென்ற னேவலதை
முடிக்கச் செய்நீ தமிழ்த்தெய்வம்
பன்னஞ் சிறக்குங் கந்தவனம்
படகும் வேற்கை யிறையவனே. (204)

கரையில் கருணை முகமழகு
கனிவு சொரியும் விழியழகு
நிரைகொள் வரைத்திண் புயமழகு
நிகரில் சயமே வயிலழகு
இரைதே னனிச்சந் தொடையழகு
இருவர் மின்னார் புடையழகு
விரைசேர் கமல வடியழகு
மிகுசீர்க் கந்த வனமழகு. (205)

உன்றன் நாமந் தனைச்சொல்ல
உள்ளந் தழல்சேர் மெழுகாகும்
மின்னும் விழிகள் நீர்பொழியும்
மெய்தான் விதிர்த்துப் புளகிக்கும்
பன்னு முரையோ தளதளக்கும்
பரவு மின்பப் பரவசந்தான்
வன்ன மயிலார் பொழிற்கந்த
வனம்வாழ் கருணை வேலவனே. (206)

போற்று தமிழ்க்கோ சிவசம்புப்
புலவன் செய்த கவிகளையச்
சேற்றி வெளியிட் டுயரறிஞர்
இன்ன வாவைப் பூர்த்திசெயும்
பேற்றை யெளியேற் குற்றருள்வாய்
பேணித் தேகம் விழுமுன்னம்
சாற்ற வொணாச்சீர்க் கந்தவனத்
தளியுற் றாடும் வேலவனே. (207)

பனையி லிருந்து விழுந்தவனைப்
பருமா டேறி மிதித்ததுபோல்
வினையி லிங்கு விழுந்ததனால்
மிடல்சேர் பாசம் மிதித்திறுக்க
நினைவி ழந்து கிடப்பேனை
நினைவை யூட்டி மீட்டருள்வாய்
கனையு மாழிக் கந்தவனக்
கருணா கரனே வேற்கரனே. (208)

ஆறு கமல மலர்முகமு
மாறி ரட்டி யருள்விழியும்
வீறு மிகுந்த வடிவேலும்
விளங்கு கரங்கள் பன்னிரண்டும்
ஏறு மயிலுங் குக்குடமும்
இணையில் தாளு மிருமாத
ராறு புறமும் நினைக்கவருள்
அழகா கந்த வனக்குழகா. (209)

வானத் தோர்கள் தமைக்காத்த
மறைநா யகனே தருக்கொழியா
ஈனத் தேங்க ளானவெம்மீ
திரங்கி மீட்ப தென்றுகொலோ
ஞானத் தேனின் னருள்சொரியுன்
நளினத் தாளைத் துய்ப்பதென்றோ
தானத் தொகைவாழ் கந்தவனத்
தானத் தானே வேலவனே. (210)

மருவார் சோலைக் கந்தவன
மருவுங் காளைக் குமரேசா
பெருமால் மண்பெண் பொன்னிவற்றில்
பெரிதுங் கொண்டு சீரழிவேன்
கருவா தனையைக் கனவினிலுங்
களைய வுன்னேன் கருத்தகத்துன்
னிருதாள் வனச நீங்காம
வென்று மொளிர வருள்புரியே. (211)

பூக்கள் சொரிந்து வணங்கிலுன்றன்
புனித மென்றாள் கன்றுமென்றோ
பாக்கள் சொரிந்து வணங்குமுயர்
பாரம் பரிய மும்வைத்தார்
தேக்க டம்ப மாலையதிற்
சிந்தை வைத்த ததனாலோ
ஆக்கள் மகிழுங் கந்தவன
மகலா துறையும் வேலவனே. (212)

பந்த மலத்தாற் கட்டுண்டு
பாழா வேனின் பாதார
விந்த மலருக் காளாகி
மேவு சுவையின் றமிழ்மாலை
எந்த வேளை யுஞ்சாத்தி
இணையி லின்ப மாரவருள்
அந்த மில்சீர்க் கந்தவனத்
தாதி சுடர்வேற் குமரையா. (213)

## வாழி

ஆறு கமல முகம்வாழி
யாறு முகம்பெய் யருளவாழி
யாறு மாறு மானதொகை
யான வரைத்தோ ணிரைவாழி
வீறு சேவல் மயில்வாழி
விரிசீர்க் கந்த வனமுருகன்
ஏறு வெற்றிச் சுடரொளியோ
டிலங்கு நெடிய வேல்வாழி.

■ ■ ■

கந்தவன மணிமாலை மூலம் முற்றிற்று.

கந்தவன மணிமாலை என்பதே இப் பிரபந்த நாமம். பாடியவர் சிவசம்புப் புலவரின் பூட்டனும் ஆறுமுக உபாத்தியாயரின் மாணவரும் எனது நல்லாசிரியருமான புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள். இப் பிரபந்தம், "பரவு கந்த சுவாமீ கானகம்" என்று அருணகிரிநாதரால் புகழப்பட்ட பொலிகண்டிக் கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி பேரிலானது. அறுசீர் விருத்தம் எனும் ஒண்பாவில் காப்பு, வாழி நீங்கலாக இருநூற்றிப்பதின் மூன்று பாக்களில் அமைந்தது.

இப்பிரபந்தத்தில் பக்திப்பிரவாகம் நெஞ்சை உருக்கும் நீர்மையது. இப் பிரபந்த வடிவம் வித்தியாசமானது. புதுமை மிக்கது. பக்திப் பெருக்கால் மரபு இலக்கண அமைப்புக்குள் எளிமையும் புதுமையும் நிறைந்த மாற்றம் புலவர்மணியும் அறியாமல் நிகழ்ந்து விடுகிறது. இதனைப் பிரபந்த அமைப்பு உணர்த்துகிறது. தூது முதல் ஊஞ்சல் வரையான பல்வேறு அமைப்புக்களின் சங்கமமாய் எளிய தமிழில் கவித்துவ வீச்சோடு உருவான பிரபந்தமாக இது மிளிர்கிறது. கந்தவன முருகனை ஞானவடிவமாய்க் கண்டு தரிசிக்கும் அதேவேளை அவனைக் குழந்தையாக்கி மடியிற் கிடத்தித் தலாட்டியும் பக்தியில் திளைக்கிறது புலவர்மணியின் உள்ளம்.

பந்தவனத்தில் சிக்கியோரை ஈடுசுறவொண்ணாத இன்பக் கந்தவனத் தலத்தை நோக்கி வழிகாட்டுவதும் செம்மறைகள் தேடும் வனமாகத் திருவாழ் கந்தவனத் தலத்தை உரைப்பதும் புலவோர்க்கு அருள் செய்த திறத்தை வியப்பதும் மாலுமயனும் அறியாத குமரன் கந்தவனத்தில் வாழ்வதாக வாயாராப் புகழ்வதும் கந்தவனத்துத் திருவீதி தொடக்கம் அவன திருநீறுவரை தித்திக்கும் மருந்து என்று சிறப்பிப்பதும் கன்னித் தமிழும் சிவநெறியும் தழைக்க வந்த கந்தவனக் கடவுள் எனத் தரிசிப்பதும் சைவ சித்தாந்தம் காட்டும் ஒப்பற்ற பதி கந்தவனம் வாழ் பதியே என்று கண்டு கொள்வதும் புலவர் மணியின் உயர்பக்திச் சிறப்பிற்காம் உரைகற்கள்.

செல்லைத்துரை சுதர்சன்
விரிவுரையாளர் - தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

வெளியீடு
கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்
பொலிகண்டி. (தைப்பூசத் திருநாள் - 03.02.2015)